Page-No-557

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 14 இதழ் : 7	சுபகிருதுஹு ஐப்பசிமீ அக்டோபர்-நவம்பர் 1962	வருட சந்தா ரூ. 3-00



Acc. No. 13855

வெளியம்பலத் திருக்கூத்து

சித்திர விளக்கம் 7. பக்கம் 292

Acc. No. 13855.

உள்பொருள்

பக்கம்

1. ஷடாதார - பராபரம் (திருப்புகழ்மணி) ... 289
2. வெள்ளியம்பலத் திருக்கூத்து (கி. வா. ஜகந்நாதன்) 292
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... 295
4. "ஆசார வீனக் குதர்க்க" திருநாகேச்சுரம் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 300
5. மின்னல் வாழ்வு (கி. வா. ஜ.) ... 309
6. திருமுருகாற்றுப்படையின் சிறப்பு (வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.) ... 313
7. வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் (கி. வா. ஜகந்நாதன்.) ... 317
8. அபேத திருச்செந்தில் ஆண்டவன் (ரஸபதி)... 322
9. VIJAYADASAMI (*Thiruppugal Mani*) ... 335

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருது௵ ஐப்பசிமீ அக்டோபர்—நவம்பர் 1962	இதழ் 7

ஷடாதார - பராபரம்

(திருப்புகழ் மணி)

244-ம் பக்கத் தொடர்ச்சி—

நெருப்பைத் தொட்டால் கையில் சுடுகிறது. அதையே பயன்தெரிந்து சரியானபடி உபயோகித்தால், நாம் உயிருடன் வாழ்வதற்குவேண்டிய நன்மைகளையெல்லாம் அதுவே செய்து தருகிறது. அதுபோல், ஆண்டவன் எப்படித் தீர்மானம் செய்து வைத்திருக்கிறானோ அதற்கு ஒத்து நாமும் நடந்து விட்டால், நமக்குத் துன்பம் வராது. அதற்கு ஒத்து மனதை வைத்துக் கொள்ளாமல் நாமே ஒரு சங்கற்பத்தைத் தனியாய் ஏற்படுத்திக் கொள்வதினால்தான், அது நிறைவேறாததால் துன்பமும், வருத்தமும் ஏற்படுகிறது. பகவானை நினைக்காமலும், அவன்வழி நடக்காததினாலுந்தான் நமக்குத் துன்பமேற்படுகிறது. பகவானை நினைத்தால் துன்பம் வந்தாலும், துன்பத்தின் உணர்ச்சி நம்மைத் தாக்காது. ஆண்டவனை நினைக்காம லிருக்கும் பொழுது துன்ப உணர்ச்சி உள்ளத்

இடையருமற் சிவத்தை, எண்ணரியினபம் உற்றோர்,
தடைபடா அச்சிவமே தாமாதல் கண்டாமே.

தைச் சுடும். அந்தச் சூட்டினால், வினைகள் எரிந்து உள்ளம் உருகுகிறது. அதற்காகத்தான் உலகில் கஷ்டங்கள் வருகின்றன. துன்பங்களே தவமாகும். அப்பொழுதான் ஆண்டவனை அதிகம் நினைப்போம்.

நாம் ஒழுங்காக வாழ்வதற்கு பகவத் தியானமும், பாதாரவிந்த அனுபவமும வேண்டும். பாதாரவிந்தத்தில் வற்ரத ஊற்றுப்போல் அருள் சுரந்து கொண்டிருக்கிறது. அவ்வாறு சுரகும் அருள் நாழிக்கிணறுபோல் தங்கி நிற்கிறது. அந்த அருள் தெப்பம் போல நின்று வினைகளைத் தாண்டுவிக்கிறது. "நாவேறு பாமணத்த பாதாரவிந்தம்" என்றார் அருணகிரியார். நாவானது பாதார விந்தத்தை நினைக்கையிலேயே நாவில் பாதாரவிந்தம் ஏறிவிடுகிறதாம். பாட்டுக்களின் மணம் அதில் வீசிக்கொண்டிருக்கிறது.

முருகா! முருகாவென்று அவனை நினைத்துக் கொண்டிருந்ததில், நீயும் நானும் ஒன்று என்ற அனுபவம் வந்துவிட்டதாம. "சரவணபவா" என்ற அக்ஷரத்துக் குள்ளிருக்கும் பிரப யார் தெரியுமா? உலகங்களைத் தனனுள வைத்துக காக்கும் பரம்பொருளே சடாக்ஷரத்துள்ளும் இருக்கிறதாம். அந்தப் பரம்பொருளாகிய முருகனே ஷடாக்ஷரமாகிய பரங்கிரி மேலுள்ள பராபரத்தை இதோ பார் என்று அருணகிரியாருககுக் காட்டியதாம். அதாவது கிரியா யிருப்பவனும், கிரிமேல இருப்பவனும் முருகனே என்பதைத் தான் இது உணர்த்துகிறது. "நாலாறு மாகமத்தின நூலாய ஞானமுத்தி நாடோறு நானுரைத்த நெறியாக" என்றார் அருணகிரியார். ஞானமுத்தி என்பது ஓம்காரம். வேற்றுமை யிருந்தால் ஓங்காரமாகிய பூரணத்தை யடைய முடியாதலலவா? வேற்

சிறந்தவர்கள் ஆனர், சிவத்தைச சிந்தித்தோர் ;
மறந்தவர்கள் ஆகி, வாழ்விழநதார் பலலோரே.

றுமை யொழிவதற்குத்தான் நீ வேறெனுதிருக்க நான் வேறெனுதிருக்க நீயும் நானும் ஒன்றி வாழ்வதுதான் நேரான வாழ்வு. அதுவே பூரண வாழ்வு. இதைத் தான் தனககுத் தரவேண்டுமென்று முருகனை வேண்டுகிருர் அருணகிரியார். ஷடாக்ஷரமாகிய மலைமேல் "இதோ பார்!" என்று தன்னையே காட்டினும் முருகன். பார்த்த அருணகிரியார் தான் வேறு, முருகன் வேறு என்றில்லாமல் அவனுடன் கலந்து விட்டாராம். பிறகு எங்கும் முருகனையே கண்டாராம்.

ஓம்காரத்தின் பொருளை உலகிற்கு உபதேசித்த முதல் குருவே முருகன. ஓங்காரந்தான் மந்தரமலை. மந்தர மலையாகிய ஓங்காரத்தை நட்டு, ஆதிசேஷனுகிய கயிற்றைச் சுற்றி ஞானமாம் கடலைக் கடைந்தனராம் தேவர்கள். அதில் ஞானுமுதம் திரண்டு வந்ததாம். தேவர்கள் கஷ்டப்படும பொழுது தேவலோகத்தைக காத்த தத்துவமே அமராவதி காவலன். ஒவ்வொரு உடலும் அமராவதி. அதைக் காத்து ரக்ஷிப்பவன் முருகன். அவன் உள்ளிருக்கும் வேற்றுமையாகிய சூர பயங்கரனும்.

நம்மிடத்தில் உரை, உணர்வு, உளம், உயிர் என்னும் நானகு மலர்க ளிருக்கின றனவாம். இதயம் மலரும் பொழுது அதனுடனிருக்கும் இந்த நான்கும் அவிழ்ந்து மலருமாம். அவ்வாறு அவிழ்ந்தால்தான் முருகனுடன் கலக்க முடியும். "இதையே சீர்பாத வகுப்பில் உரையவிழ, உணர்வவிழ உளமவிழ, உயிரவிழ, உளபடியை யுணருமவ ரனுபூதி யானதுவும் என்ருர் அருணகிரியார். இவையனைத்தும் அவிழ முருகனுடன கலந்து பிரம்ம சங்கல்பமே பொருளாக நின்ருர் அருணகிரியார்.

ஓராமல, தெய்வததை உன்னுமல் கற்ற கல்வி,
சாரீரம் இல்லாத சங்கீதம் போலாமே.

வெள்ளியம்பலத் திருக்கூத்து

(கி. வா. ஜகந்நாதன்)

அங்கயற்கண் அம்மையின் திருமணத்துக்கு ஏழுலகத்தி னின்றும் வானவர், மக்கள் முதலியோர் வந்திருநதனர். திருமணம் ஆனபிறகு அவர்கள் யாவரையும் உண்ணுவதற்கு அழைத்தனர். திருமணத்துக்கு வந்திருந்த வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் சுந்தரேசனை வணங்கி, "அம்பலததில் ஆடும் நினனுடைய நடன தரிசனம் கண்ட பிறகே உணபது எனற நியமம் பூண்டிருக்கிறோம். ஆதலின் இப்போது உண்ண இயலாதே!'' எனறனர். அது கேட்டுச் சுந்தர பாண்டியனாக விளங்கிய இறைவன், "அந்த நடனத்தை நாம் இங்கே செய்து காட்டுவோம். உலகம் யாவும் உருவமாகிய புருஷனுக்குரிய இதய கமலம் தில்லை. இது துவாதசாந்தம். இங்கே நாம் நடனம் செய்ய, அதைத் தரிசியுங்கள்'' எனறு அருளினன்.

"மற்ற அங்கங்கள் எவை?'' என்று முனிவர்கள் கேட்டார்கள்.

"திருவாரூரே மூலாதாரம்: திருவானைக்கா சுவாதிஷ்டானம்; திருவண்ணாமலை மணிபூரகம்; தில்லை அநாகதம்; திருக்காளத்தி விசுத்தி, காசி புருவ மத்தியமாகிய ஆக்ஞை, கயிலாசமே பிரமந்திரம்; இந்த மதுரை எலலாவற்றுக்கும் மேலான துவாதசாந்தம். தோன்றிய முறையினுல் இவை இப்படி அமைநதன'' என்று கூறி எம்பெருமான் ஆலயததுள் புகுந்தான்.

அங்கே விமானத்துக்குக் கிழக்கே கயிலாசமே வந்தது போன்ற வெள்ளியம்பலம் ஒன்று தோனறியது. அதன்கண்

உள்ளமைதி இல்லார்க்(கு), ஒருநாளும் இனபமிரா ;
உள்ளதெலாம் சொத்தை, உணரவரும் துன்பமரோ.

மாணிக்கப் பீடம் ஒன்று உண்டாயிற்று. அதன்மேல் கோடி சூரியர் உதித்தாற்போன்ற தேசுடன் இறைவன் தோன்றினன். கணங்கள், மொந்தை, தண்ணுமை முதலிய வாத்தியங்களை முழங்கின. நந்தி முழவு வாசித்தான். நாராயண மூர்த்தி இடக்கை என்ற வாத்தியத்தை வாசித்தார். தும்புரு நாரதர் வீணை வாசித்தார்கள். துந்துபிகள் முழங்கின. வேதமே சுருதி கூட்டப் பிரமதேவன் சாமகான யாழை மீட்டினன்.

சிவபரஞ்சுடர் முயலகன்மீது வலக்காலை ஊன்றி இடத் தாளை எடுத்துப் பத்துக் கைகளையும் வீசி ஆடத் தொடங்கினன். நீலகண்டமும், சங்கமும் குழையும் அணிந்த திருச்செவிகளும், செஞ்சடையும் திருநீறும் முக்கண்ணும் தோன்ற இறைவன் நடனம் செய்தான்.

கங்கை நதி அலை குமுறிய ஓசையும், கொன்றை மலரில் ஊதும் வண்டின் ஓசையும், மங்கல முழவின் ஓசையும், வேத ஒலியும், கையிலுள்ள எரி கனன்று எழும் ஓசையும், திருவடிச் சிலம்பின் ஓசையும் எங்கும் நிரம்பி அன்பர்களின் செவிகளில் அமுதத்தைப் பெய்தன.

அமல மூர்த்தியாகிய இறைவன் ஆடினன். பதஞ்சலி யும் வியாக்கிரபாதரும் இந்த நடனத்தைக் கண்டு கைகுவித்து அடியில் வீழ்ந்தனர். வேதமோதித் துதித்தனர். ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி அன்புபொங்க நின்றனர். அவ்விரண்டு பேருக்காக ஆடிய இந்த நடனத்தை, வேறு முனிவர்களும் கந்தருவரும் வானோரும் தானவரும் யோகிகளும் கிம்புருடரும் பிறரும் கண்டு களித்தனர்; திருமணம் காணவந்த உலக மக்களும் கண்டு பெறுதற்கரிய பேற்றைப் பெற்றார்கள். அப்போது பதஞ்சலி முனிவர் கண்ணீர் வார நின்று மனம் கரைந்து துதிக்கலானார்.

ஆண்கள் சிவமாகப், பெண்களெலாம் பார்வதியாய்க்
காணும் திறனுடையார், இவ்வுலகைக் காப்பவரே.

"பராபர முதலே போற்றி; பத்தியில் விளைவாய் போற்றி;
சராசரம் ஆகி வேருப் நின்றதற் பரனே போற்றி;
கராசல உரியாய் போற்றி; கனகஅம் பலத்துள் ஆடும்
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி"

[கராசல உரியாய் - யானைத் தோலைப் போர்த்தவனே. கனக அம்பலம் - பொன்னம்பலம். நிராமயன் - மாசற்றவன்]

"அடியரேம் பொருட்டு வெள்ளி அம்பலத் தாடல் போற்றி;
பொடியணி தடந்தோள் போற்றி; புரிசடை மகுடம் போற்றி;
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி;
நெடியநற் பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி."

[பொடி - திருநீறு. கடி - நறுமணம். கயல்விழி - மீனாட்சியம்மை.]

இவ்வாறு துதித்து வணங்கினர் பதஞ்சலி முனிவர். இறைவன் அவ்விரு முனிவரையும் நோக்கி, "உங்கள் விருப்பம் ஏதேனும் இருநதால் அதை நிறைவேற்றுவோம்" என்று கேட்டான். "எம்பெருமானே, இந்த வெள்ளியம்பலமும் நின் திருக்கூத்துக் கோலமும் என்றும் நிலையாகவே இங்கே அமைய வேண்டும்; இந்தக் கூத்தைத் தரிசித்தவர்கள் பிறவாத நிலையைப் பெறவேண்டும்' என்று வேண்டினர். இறைவன் அவ்வாறே ஆகுக என்று அருள் செய்தான். அதுமுதல் வெள்ளியம்பலத் திருக்கூத்தை, மதுரை மாநகர் ஆலயம் சென்று வணங்குவோர் யாவரும் கண்டு இன்புறும்படி அவ் வம்பலம் அங்கே நிலைபெறலாயிற்று.

கற்புக் கனலில் கலந்துமகிழ் இல்லறந்தான்,
பொற்கட்டி, தீயில் புடமிடுதல் போலாமே.

குமாரஸ்தவ விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

ஜய ஜய பதயே நமோநமஃ

ஜய ஜய - பெருவெற்றியுள்ள ;

பதயே - தலைவ (குமரபிரா)னுக்கு

நமோநம - போற்றி ! போற்றி !! வெற்றி வேலனுக்குப் போற்றி ! போற்றி !!

வெற்றி :

ஒருவன் படித்து மேல் வகுப்பு செல்ல முயற்சி செய்கிறான். அவ்வித முயற்சி பயன் தருகிறது. மேல் வகுப்புக்கு விரும்பிய வாறே செல்கிறான். அப்போது அவனுக்கு வெற்றி கிட்டியது என்பர். முனைந்த செயல் முன்னியவாறு முடிவு பெறுவது வெற்றி. போட்டியில, தேர்தலில், வழக்கில் முயன்றோர் வெற்றி பெற்றமை கேட்கிறோம். ஆயினும் பெரும்பாலும் போர்முகத்தில் வெல்லுவதே வெற்றி எனப்பட்டது. ஒரு நாட்டின் மீது அரசன் படை எடுத்துக் கைபற்றினாலும், ஒரு வீரன் தன் பகைவனை முறியடித்தாலும் வெற்றி பெற்றதாகக் கூறுவது வழககம்.

உண்மை வெற்றி எது ;

ஒரு போரில் ஒருவன் தோற்று விட்டான் என்றால், மற்றொருவன் வென்றான என்று கூறுவர். ஆனால் அவ்வெற்றி அவனுக்கு எவ்வாறு கிடைத்தது. மற்றொருவன் இவனோடு போரிட முடியாததனா லன்றோ ? எதிரி போரிட முடியவில்லை என்றால், அவன் வென்றவனைவிட போர்த்திறம் குறைந்த வன் என்பது தானே பொருள். ஆயின், வன்மை குறைந்த

ஓம் வடிவத் தெய்வம், உயிரிலுறை கினறதனை,
நாம் காணும் நேர்வழி, நல்தியானம் என்றறியே.

அவனைவிட வன்மை மிக்க ஒருவன் வெல்லுதல் எவ்வகையில் சிறப்பாகும். சிந்தியுங்கள்! எளியவனை வலியவன் முறியடித்தல் வெற்றியாகுமா? ஆகாது. ஆகாது. ஒருவன் தன்னைப் போலவே பலமுள்ள எதிரியுடன் போரிட்டுக் கிடைப்பதே உண்மை வெற்றியாகும். அதற்காகப் போரில் எவன் வனமை குறைந்துள்ளானோ, அவனுக்கு உடல்பலம் நிறையக் கூடிய உணவு முதலியவற்றை உதவி தனக்குச் சரிநிகர் சமமாகச் செயதலே என்று கூறுவர்.

பெருவெற்றி :

ஜயம் என்றால் வெற்றி என்பது பொருள். அதனையே இரு முறை 'ஜய ஜய' எனக்கூறினால் பெருவெற்றி என்று பொருள் கொள்ள வேண்டும். *அப்ப மூர்த்திகள் தாண்டகத்தில்* 'அவை யெல்லாம் ஊரல்ல அடவிகாடே என்கிறார். அடவி என்பது காடு என்று பொருள் தரும் வடசொல். காடு என்பது தமிழ்ச் சொல். அடவி, காடு என்ற இரண்டு கூறியதால் 'காடு காடு' அல்லது பெருங்காடு எனக் கொள்ள வேண்டும். அதுபோலவே 'ஜயம் ஜயம்' எனறு கூறுவதால் பெருவெற்றி எனப்பட்டது. ஈண்டுகுறித்தது சூரபன்மனுடன் போரிட்டு முருகவேள் பெற்ற வெற்றியாகும். இவ்வெற்றியைப பெரு வெற்றி என்னல் எவ்வாறு பொருந்தும்? ஆராய்வோம்.

வேலன் வெற்றி :

இதுவரையில் பலர் வெற்றி பெற்றுள்ளனர். 1. சிவனார் திரிபுர மெரித்தனர். திருமால் அமிசமான இராமன் இராவணனை வென்றான். தேவராசாவான இந்திரன் வலன் என்ற அசுரனை அழித்தான். இவ்வெற்றிகளில் பகைவர்

அன்புக் கனலும், அருளொளியும் ஒன்றானல்,
இன்பமயம் தேகம் : இதை நினைநீ, என்மனனே !

நாட்டு அழிவோ, அல்லது பகைவருக்கு மரணமோ கிடைத்தன. ஆனால் நம் சுடர் வேலன் செய்த சூரன் போரிலே, சூரன் அழியவில்லை. சூரன் மயிலாகவே இன்றும் இருக்கிறான். பகைவனை அழிக்காமல் இருப்பது மட்டும் வெற்றியல்ல.
2. தன்னொடு போரிட்ட சூரனை வென்று, அவனுக்குத் தம் திருவடி தாங்கும் பேறும் உதவி, தம்மை வணங்க வரும் அடியார் அனைவரும் அவனை வணங்கிய பின்புதான் தம்மை வணங்கவும் வைத்துள்ளார். இதுபற்றியே ஆறுமுகன் ஆலயத்தில் அண்ணல் சந்நிதிக்கு செல்லுவோர், முதலில் சூரன் வடிவான மயிலை வணங்குவது மரபு. இனி குகன் அடைந்த வெற்றி என்ன வென்றால், பகைவனான சூரனது தீக்குணமான (பிறர்க்கு) அச்சமும் துயரமும் தரும் நிலையை மாற்றியதே என்க.

"இந்து மிலைந்தோன புரஞ் செறுத்தான், வளை ஏந்து நல்வை
குநதன் இலஙகையர் கோன் சினந்தான், நறுங்கோலமலி
இநதிரன ஈடார் வலன செறுத்தான, அருளே மிகுந்த
கந்தன் அடியார் துயர் செறுத்தான் சர்வ காலமுமே

எனவரும் பாம்பனடிகள திருவாக்கினை எண்ணுஙகள்.

மேலே கூறியவற்றி விருநது (அ) சூரனை பகைவனை அழிக்காமலும், (ஆ) அவனது தீய குணங்களை ஒழித்தும், (இ) தம் திருவடி தாஙகும் ஊர்தியாகச் செய்தும், (ஈ) முதலில் அவனை வணஙகிய பினனரே தம்மை வணங்கத் தக்க பெரும் பதவியும் அளித்தமையால் கந்தனின வெற்றி பெரு வெற்றி என்னத் தடையில்லை யல்லவா?

அடுக்குச் சொல்லின் அருமை:

1. 'ஜய ஜய' என்று இருமுறை கூறியதன் அருமையை இனிக் காண்போம். சூர சம்மார களத்தில்

உண்மையைக் கண்டே உளம்புகுந்த தெய்வத்தை,
எண்ணி யிருக்கின்றோர் ஏமாந்து போகாரே.

செவ்வேள் பரமன் பெற்ற வெற்றியை மண்ணவரும் போற்றினர். விண்ணவரும் போற்றினர். ஆதலின் ஜெயஜெய என் இருமுறை கூறப்பட்டது. 2. வெற்றி குறித்து மகிழ்வோர் 'ஜய' என்று ஒருமுறை கூறுவதில்லை 'ஜய ஜய' இரண்டு முறை சொல்லுவதும் காணலாம்.

"திமி திமெனப் பொருசூரன்
நெறு நெறெனப் பலதேவர்
ஜெயஜெய எனக் கொதிவேலை—விடுவோனே"

3. சூரன் போர் முடிந்ததும், போர் நடக்கும் போதும் அங்கு இறந்த அசுர ருடலிலுள்ள கொழுப்பு முதலியவற்றை உண்டு 'சிவகுமாரருக்கு ஜெய' எனக் கோஷித்தன என்பது :

"வலி சேர்ந்த திண்புயமே
ஏய்ந்த கண்டகர் கால் தொடை
மூஞ்சி கந்தர மோடு
எலும்புறுந் தலைகளும் துணிந்திட
அடர்ந்த சண்டைகள் தொடர்ந்து பேய்
எனும் குணுங்குகள் நிணங்க ளுண்டரன்
மகன் புறம் ஜயம் எனும் சொலே
—களமிசை எழுமாறே

[வண்மை மிக்க திண்ணிய தோள்களுடைய அரசர்களது கால், தொடை, முகம், கழுத்து தலைகளும் அற்றுவிழ, நெருங்கிய சண்டைகள் தொடர்ந்து நடைபெற, அங்கிருந்த பேய் என்ற குணுங்குகள் அரக்கரது கொழுப்பை உண்டு, 'சிவகுமாரருக்கு ஜே' எனும் கூச்சலே போர்க்களத்தில் எழும்படி] (பஞ்சாமிர்தவண்ணம்)

என்ற அடிகளால் அறியலாம்.

அன்புநீர் வார்க்க, அருள்மலரும் அற்புதத்தை,
அன்பர்கள் கண்டுகண்டு, ஆநந்தம் கொள்வாரே.

வெற்றியின் தத்துவம் :

சூரபன்மன் ஆணவத்தின் அவதாரம். சூரனை அடக்கிய வெற்றி ஆணவ கண்டனம ஆகும். ஆணவம் அடங்கினால்தான் ஆண்டவன் அருள் வரும் ஆதலின், ஆணவத்தை (சூரனை) அடக்கிய வெற்றிவிழா கந்த சஷ்டி விழாவாகக் கொண்டாடப் படுகிறது. சேயவனது சேவகங்களில் சூரசம்மார வெற்றியே மகுடம் போல்வது. மேலும் நமது ஆணவ மலச்செருக்குஅடங்க வேண்டுமானல் குகவேள் சூரனை அடக்கிய ஜெயத்தைப் பாராட்ட வேண்டும். ''சூரசம்மார ஜெய ஜெய'' என இரவும் பகலும் தாளைப் பணிந்து போற்றல் வேண்டும். அப்படிச் செய்யும் அன்பர்களது ஆணவச் சிமிழ்ப்பினை அறுக்க ஆறுமுகன் அவர்கள் முன் காட்சியாவான். அவ்வித நிலை தமக்கு வேண்டும் என்று நமது அருணகிரியாரும்,

" நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய
சுரர்கள் ஏத்திடு வேலா ஜேஜெய
நிமல னார்க்கொரு பாலா ஜேஜெய—விறலான
நெடிய வேற் படையோனே ஜேஜெய
என இராப்பகல் தானே நான்மிக
நினது தாள்தொழு மாறே தானினி யுடனேதான்
தமிய னேற்கு முனே நீ மேவுவது—ஒருநாளே "

என்று வேண்டுகிறார்.

இவ்வுண்மையை உணர்த்த வேண்டியே நமது பாம்பனடிகளும், 'ஜய ஜய' எனப் போற்றத்தகும் பெரு வெற்றி வீரனை

" ஜய ஜய பதயே நமோநம "

என்று குறித்திருப்பதை எண்ணும் போது இதயம் களிக்குமே.

சித்தம் சிதறுகின்றோர், சித்தனலைத் தாமறியார் ;
புத்திகெட்டார் என்றியற்கை, புன்சிரிப்பு செய்யுமரோ.

திருநாகேச்சுரம்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னூனைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்
ஆகாதெ னுமற் பொசித்த துட்டர்கள்
நானுவு பாயச் சரித்ர துட்டர்கள்
ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள் தமியோர்சொம்
கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை
கூடாக பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப்பி றப்பினி லுழல்வாரே;
வீசாவி சாலப் பொருப்பெ டுத்தெறி
பேராற வாரச் சமுத்தி ரத்தினில்
மீளாம லோடித் துரத்தி யுட்குறு மொருமாவை
வேரோடு வீழத் தறித்த டுக்கிய
போராடு சாமர்த் தியத்தி ருக்கையில்
வேலாயு தாமெய்த் திருப்பு கழ்ப்பெறு வயலூரா!
நாசாதி ப்ராரத் ததுக்க மிக்கவர்
மாயாவி காரத் தியக்க றுத்தருள்
ஞானோப தேசப் பிரசித்த சற்குரு வடிவான
நாதாவெ னுமுற் றுதித்தி டப்புவி
யாதார மாய்கைக் குமுட்ட முற்றருள்
நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே!

தாய்மடியில் சேய்போல, தற்பரன்தாள் சார்ந்தாரை,
வாய்மைச் சமாதிநலம் வந்தணைதல் கண்டாமே.

(பதவுரை.) (வீசா விசால......வயலூரா!)

விசார விசாலப் பொருப்பு எடுத்து எறி பேர் ஆரவார சமுத்திரதத்தினில்-மாபெரும் மலைகளைப் போன்ற அலைகளை, எடுத்து வீசி எறிகின்ற பேரொலி விளைவிக்கும் (பெருங்) கடலில்;

மீளாமல் ஓடித் துரத்தி உட்குறும் ஒரு மாவை வேரோடு வீழத் தறித்து—மீட்டும் தலையெடுக்காதபடி வேகப்பட விரட்டிச் சென்று, (அதனால்) அச்சம் கொண்ட (சூரபதுமனை) பெரிய மாமரத்தை வேருடன் சாயுமாறு வெட்டி;

(உட்குறும் - அஞ்சும்.)

அடுக்கிய போராடு சாமர்த்தியத் திருக்கையில் வேலாயுதா - (அம்மரத்தைப் பல கட்டைகளாக) அடுக்கிய (வீரப்) போர்செய் திறமைமிகு வேல்படை திருக்கரத்தில் திகழ்பவனே! மெய்த் திருப்புகழ் பெறு வயலூரா - மெய்ம்மைத் திருப்புகழை (ப் பாடுவார் பாட, அவைகளை இனிது) ஏற்று வயலூர்ப் பதியில் வாழ்பவனே!; (திரு - அருள்.)

(நாச ஆதி......பெருமாளே!)

நாச ஆதி பிராரத்த துக்கம் மிக்கவர் - அழிவை முதலாவுடைய முன் வினைத் துன்பம் முதிர்ந்தவராய்;

மாயா விகாரத் தியக்கு அறுத்தருள் - விகார மாயையால் விளையும் கவலைகளைக் களைந்தருளும்;

ஞான உபதேச ப்ரசித்த சற்குரு வடிவான நாதா எனு முன் துதித்திட - ஞான போதனை செய்யும் உலகறி புகழுள பரமாசார்யத் திருமேனியான நாதா என்று முன்னொரு சமயம் புகழ்ந்து போற்ற;

கோளும் பொய்யும்பேசிக், கோளாறு தேடாமல்
நாளும் சிவநாமம் நாம்சொல்லி வாழ்வோமே.

புவி ஆதாரம் ஆய்கைக்கு - (அறிஞர்) உலகம் ஆதாரத்தை ஆய்ந்து அறிதற் பொருட்டு ;

முட்ட முற்று அருள் - (அதை) முழுதும் நிறைவுபெற அருளி ;

நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே - திருநாகேஸ்வரர் எனும் திருப்பெயருடைய தந்தை(யான சிவனார்) பெரிது பாராட்டிய பெருமையனே !;

(ஆசார ஈன...... துட்டர்கள்.)

ஆசார ஈன குதர்க்க துட்டர்கள் - இழிந்த ஒழுக்கமும் (துயர் மிகுவிக்கும்) வீண் வாதமும் கொண்ட துஷ்டர்கள் ;

மாதா பிதாவைப் பழித்த துட்டர்கள் - தாய் தந்தையரைப் பழிகூறும் தறுதலைகள் ;

ஆமாவின ஊனைச் செகுத்த துட்டர்கள்-பசுவின் இறைச்சிக்காக (அவைகளை) வெட்டிய பாதகர்கள் ;

(பரதாரம்...... துட்டர்கள்.)

பரதாரம் ஆகாது எனுமல் பொசித்த துட்டர்கள் - அயலார் மனைவியர் தொடர்பு ஆகாது என்னும் அறிவு இல்லாமல், (அவர்களை) அனுபவித்த அக்ரமக்காரர்கள் ;

நாஞ உபாய சரித்ர துட்டர்கள் - (நாச செயலுக்குப்) பலவகைத் தந்திரங்களைத் தழுவிய வரலாற்றில் வரும் வீணர்கள் ;

ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள் - போதை தரும் மதுவைப் பருகிய பொல்லாதவர்கள் ;

(தமியோர் சொம்...... துட்டர்கள்.)

தமியோர் சொம் கூசாது சேரப் பறித்த துட்டர்கள் - அகதிகளின் (எளிய) சொத்தை, மனம் கூசாமல் ஒரு சேர அபகரித்த அநியாயக்காரர்கள் ; (சொம்-சொத்து).

ஆதி யுகத்தில், அருளறம் வாழ்ந்து,மதி,
நீதி,நிறை எங்கும் நிழலிட்டு நின்றதுவே.

ஊரார்கள் ஆசை பிதற்று துட்டர்கள் - ஊரில் இருப்பவர்கள் பேராசைக்காரர்கள் என்று, (தம்குறையைப் பிறர் மேல் ஏற்றிப்) பிதற்றித் திரியும் பெருங்கொடியோர்;

கோலால வாள் வில் செருக்கு துட்டர்கள் - ஆரவார வாள்போர், வில்போர்களால் ஆணவம் கொண்ட ஆக்ரமிப்பாளர்கள்;

(குருசேவை கூடாத......துட்டர்கள் உழல்வாரே!)

குரு சேவை கூடாத பாவத்து அவத்த துட்டர்கள் - குரு தரிசனம் வாய்க்காத பாவமான தீமையையே பயின்ற துட்டர்கள்;

ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள் - ஈகை (யின்பம்) காணுமல், ('பாடுபட்டுத்) தேடி(ப பணத்தைப்) புதைத்து வைத்த கேடுகெட்ட மானிடர்கள்';

கோமாள நாயின கடைப் பிறப்பினில் உழல்வாரே- கொம்மாளமிட்டுத் திரியும் நாயைவிட கீழ்த்தரமான பிறப் பெய்தி, (இவ்வுலகில்) அலை மோதித் தவிப்பர், (எ - று.)

விரிவுரை

அக்கிரம சூரபதுமன், ஆணவ சொரூபம் ஆனவன். அவனுல் உலகம், அலைமோதித் தவித்தது. எம்மான குமரன் அவனை எதிர்த்தான். மோதல் தாங்க முடியாத சூரன், நெடுங் கடலில் மாமரமாகி நின்ருன். விடேன் விடேன் என்று தொடர்ந்தது வேல். கடல்முழுதும் சூரன் கால்வாங்கி ஓடினன். இதனுலும், வேகம்பட வந்த வேலாலும், எழுந்தவை மலைகளா அல்லது அலைகளா என்று அறிய இயலாதபடி, ஆரவாரித்தது கருங்கடல்.

இருள்தானே! இன்னும் சிறிது இருக்கட்டுமே என்று, அதற்கு இரக்கம் காட்டுவது நிசிரர் மனநிலை. ஆணவ இருளால்

அடுத்த யுகத்தில், அருளறத்தைக் காக்க
எடுத்த அவதாரம், ராமகதை ஆயதுவே.

வினையும் அவதியை நினைபவர், அது அடங்காதா, அடங்கி ஒடுங்காதா என்றே அழுது கதறுவர்.

இறைவன் வியாபகன்; ஆன்மா வியாப்பியம்; வியாதி போல் இருக்கிற ஆணவம், வியாத்தி எனப்பெறும். விரைந்து ஓடும் மாமரத்தை இன்று விட்டுவிட்டால், மலைகள்போல் கடல் அலைகளை மேலும் எழுப்பி, அது உலகையே மட்டந் தட்டிவிடும். அதனுல் தான் வேல், வேரொடு சாயுமாறு அம் மரத்தை வெட்டி வீழ்த்தியது. அவ்வளவுதானு! அம்மரத்தைப் பலபடப் பிளந்து, அளவிறந்த கடடைகளாகவும் அடுக்கியது. இப்படி வரலாறு கந்தபுராணத்தில் இல்லை என்று ஏங்க வேண்டா. வடமொழி காந்தத்தில் இல்லாத செய்தி பல, தென் மொழிக் காந்தத்தில் இருக்கின்றன. அதில இல்லாத செய்தி பல, அநுபூதிமான்கள் அறிவிப்பில் உள. அதை அறிவிக்கவே இப்படி உரை செய்தேம்.

தறித்து அடுக்கிய போராடு சாமர்த்தியம் என்பது, வேலுக்கு அடை. வேலனுக்கு அடையாக்கினுமாம். தறித்து - வெட்டி; அடுக்கிய போர் ஆடு சாமர்த்தியம் - ஒன்றின பின் ஒன்ருய்த் தொடர்ந்து செய்த போர்த்திறம் என்று பொருள் கொள்வதும் ஒருவகை.

கருவில் தங்கிய காலத்தின் அருமையால், புவியில் ஒரு சிலர் புகழெய்தியுளர். எனவே அவர் புகழ், கருப்புகழ் என்னும் அளவில் அளங்கிவிடும். வரவர அது புழுங்கிப் பொய்த்துப் பொன்றிவிடும். அருளாளன் முருகன் புகழ்தான் திருப்புகழ். அது எனறும் மெய்யாய் இலங்குவது.

பாத காணிக்கைபோல், பரமன் திருப்புகழைப் பாடு கின்ருர்கள் பக்தர்கள். அவைகளைப் பெற்றுக் கொள்பவன், வளமார் நிலைதரு வயலூரன். அதனுல்தான்,

---

ஊன்றி அதர்மம், உயரறத்தைத் தான்மோதி,
மூன்ரும் யுகத்தில், முறுவலித்து நின்றதுவே.

'மெய்த்திருப்புகழ் பெறு வயலூரா' என்று, அன்பொடு முனிவர் அழைக்கின்றார்.

முற்பிறப்பிற் செய்த வினை, இப்பிறப்பில் பிராரத்வப் பெயர் பெற்று வரும். இது நல்வினை தீவினை என்று உயிரை நாடிவரும். சுகம்போல் சொக்க வைப்பது நல்வினை. துன்பம் எனத் தீவினை தன் தோற்றம் காட்டும். உண்மையில் இரண்டும் மோதுகின்ற துக்க முழுமைதான். இப்படி 'நாசாதி பிராரத்த துக்கம் மிக்கவர்' உலகர்.

அடடா! இவ்வளவுதானா! அண்ட பிண்ட சராசரம் யாவும், மாயா விகாரமே. மண்ணென, பொன்னென, பெண்ணெனத் தோன்றி மயக்கும் இந்த விகாரப் பாட்டை, உயிர்கள் விரும்பும் விபரீதத்தை யாரிடம் சொல்லி ஆறுவது? இவைகளால் எவ்வளவு தொல்லைகள், கவலைகள், துக்கங்கள்.

ஆணவம் அடஙக, கன்மம் கலங்க, மாயா விகாரம் மாய,

'மாயா விகாரத் தியக்கு அறுத்தருள்
ஞானோபதேசப் பிரசித்த சற்குரு நாதா!

என்று, இடையறுது அழைததுக் கொணடிருப்பதுதான் நலம். (தியககு தியககம்; தேஙக வைககும் கவலை.) அநுட்டான உருவில், இதை அன்று சிறக்கக் காட்டினர் சிவபிரான.

ஆணவ 'மாவைத தறித்த வேலாயுதா!' பிராரத்த துக்கம்; 'மாயா விகாரத் தியககு அறுத்தருள்......சற்குரு வடிவான நாதா!'

என்று சிவனார் முன்னின்று துதிக்க, ஓம் பொருள் முழுதையும் சிறக்க அருளினன சிவகுமரன. அதை முட்ட முற்ற அருள் எனகிறேன. (முட்ட - முழுதும்; முற்ற - நிறைவு பெற.)

முறை துறை மறக்க வைக்கும் மும்மலம் தீர, வழிதுறையறியாது உலகம் வருநதுகிறது. தாவும் கொடிபோல்

ஈரமின்றி, இனப இதயமினறி அன்பழியக்,
கோரக்கூத் தாடி,கலி கொககரித்து நிற்கிறதே.

ஏவரைத் தழுவினாலும், அவர்களை கைவிடும்படிச் செய்து விடுகிறது கால தத்துவம். அடபாவமே! ஆதாரம் இல்லாமல், இப்படி எத்தனை நாள்தான் அவதிப்படுவது?

ஆதாரமான இடம் எது? அதை ஆய்ந்து அறிதற்கு வழி வகை தோன்ற, 'முட்ட முற்று அருள்' முருகனை மறக்குமோ இந்த மனம்!

கும்பகோணத்தை அடுத்துளது திருநாகேச்சுரம். அத்தலத்தில் சிறக்க வீற்றிருக்கின்றார் சிவபிரான். அவர்க்கு உபதேசத்தைக் குமரன் அருளினன. மேன்மைச் சேயின் உபதேச அருமையை, என்றும் மெசசுகின்றார் தந்தையார். தகப்பன் மெச்சிய பெருமானே!

உம்மை உணராத உலகர் பலர், எப்படி யெப்படி துஷ்டத் தனத்தில் துறுதுறுக்கின்றனர்.

மனம் நாற, உடல் நாற, வாய் நாற நின்று, பாழான ஒழுக்கம் பயில்வார் பலர்; இவர்கள், தம்நிலை யறியார். பெரிதும் விதண்டை பேசுவார். "ஆசார ஈன குதர்க்க துட்டர்கள்" எனும் பெயரினர் இவர்.

தாம் திருந்தார். திருத்தும் பெற்றோர்களை, எத்தனை இழி மொழிகளால் ஏச இயலுமோ அத்துணையும் ஏசுவர். "மாதா பிதாவைப் பழித்த துட்டர்கள்" எனப்பெறுவர் இவர்.

கோமாதாவை வழிபடலை மறந்து, கொல்லவும் துணியும் கொடியோர்களை எனனென்று கூறுவது? இப்படியும் ஒரு சிலர் உளர்; 'ஆமாவின் ஊனைச் செகுத்த துட்டர்கள்' எனப் பெறுவர் இவர்.

அயலவர் மனையாளை அகப்படுத்த, பாதக சாதகம் பல செய்வர். ஐயோ! இப்படியும் ஒரு சிலர் இருக்கின்றனரே. "பரதாரம் ஆகாது எனுமல் பொசித்த துட்டர்கள்" எனப் பெறும் பொல்லாதவர் இவர்கள்.

வறுமை, மடமை இருள், வாயாடும் போலிநிலை,
சிறுமை உதட்டுறவு கண்டுசிந்தை நோகிறதே.

பல வகையான பாப தந்திரத்தில், பணம் தேடும் கொடி யோர் கூட்டம் ஒரு புறம். "நாறு உபாய சரித்ர துட்டர்கள்" இவர்கள்.

ஓயாத மது போதையை, உலகில் உகப்பாரும் உள்ள னரே. 'ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள்' என்று, அகில உலகும் இவர்களை யறிந்துளது.

ஏழை எளியவர், தம் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி, அரும்பாடு பட்டுச் சேர்த்த சொல்ப சொத்தை, ஒரு சேரக் கொள்ளை யடிக்கும் குழுவினரும் ஒரு சிலர். 'தமியோர் சொம், கூசாது சேரப் பறித்த துட்டர்கள்' இவர்களா; ஆ! இது எவ்வளவு கொடுமை!

அளவிலாத் தன் பேராசையை மறைக்க, அவன் ஆசை யைப் பார்! இவன் வேட்கையைப் பார்! மட்டற்ற அவாவால் மயங்குகின்றவன் இவன் என, ஊரில் இருக்கும் ஒவ்வொரு வரையும் குறை கூறும் கொடியோரும் உளளனரே!

"ஊரார்கள் ஆசையைப் பிதற்று துட்டர்கள்" இவர்கள் ஆரவாரச் செய்தியை, ஓத ஒரு நாப் போதுவதோ?

சிலம்பம் பயின்ற திமிரால், ஆளை அடிப்பது எம் தொழில் என்று அகங்கரிப்பார்க்கும் அளவுளதோ? 'கோலால வாள் வில் செருக்கு துட்டர்கள்' இவர்கள் செய்தி, கொடுமையினும் கொடுமை.

"பிறர் மனையவரைப் பெற்றதாய் எனவும்,
பிறர்பொருள் எட்டியே எனவும்,
பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும்,
பிறர்துயர் என்துயர் எனவும்
இறுதியே வரினும் என்மனக் கிடக்கை
எம்பிரான்!"

பள்ளிச சிறுரும், பயிலல் தனைமறந்து,
துள்ளிவீண் ஆட்டத்தில், தோய்தல் கலித் தொல்லையதே.

என்று, பாரதத்தில் பீமன் பகர்வதாக ஒரு பகுதி வருகிறது. இத்தகைய மனத்தரே உலகை யீடேற்ற உதித்தவர்கள்.

அண்மையில் ஆசாரிய மூர்த்திகள் எழுந்தருளி யிருந்தும், அவரைச் சேவிக்கக் கொடுத்து வைக்காத கொடிய தீவினை யாளர், எவ்வளவோ பேர் இன்றும் உலகில் இருக்கின்றனரே. 'குரு சேவை கூடாத பாவத்து அவத்த துட்டர்கள்' இவர்கள்.

பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தைத் தாமும் அனுபவியா மல், பிறர்க்கும் உதவாமல், பிறகு நமக்கு உதவும் என்று னினைவால், மண்ணில் புதைத்து வைத்து மறைந்தவர்கள் எவ்வளவு பேர்?

ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள் சரித்திரம், சகிக்க முடிவதில்லையே!

இந்த ஏகாதச துட்டர்கள் எந்நாளும் உருப்படார். இவர்கள் செயலகளைப் பனனி யுரைக்குங்கால் பாரதமாம். அவர்கள் செயல்களை மேலும் விரித்து எண்ணுதலும், பேசு தலும் எழுதுதலும் பாதகம். இவ்வளவு சொன்ன இதுவே போதும். இத்தகையர், பேசத் தகாத நாயினும் கேடுகெட்ட பிறப்பெடுத்து, எண்ணிலா வேதனைகளை எய்துபவர்கள். வேலாயுதா! வயலூரா! குருநாதா! பெருமாளே! மேலுரைத்த துட்டர்கள் தொடர்பு நேராதபடி, கா! கா!! கா!!! என்று கனிவொடு விண்ணப்பித்துக் கதறியபடி

வாழ்க திருப்புகழ்வளம்

ஓம்

கோயிற்குச் செல்லல், கும்பிடவே என்பதின்றி,
வாயிலுறு வம்புதும்பு, அங்கும் வளர்கின்றதுவே

மின்னல் வாழ்வு

(கி. வா. ஜ.)

இந்த வாழ்வு நிலையாதது என்பதை அறிவுடைய மனிதன் எவனும் அறிய முடியும். மனிதன் பிறப்பதும் இறப்பதும் நுட்பமான அறிவினுல் ஆய்ந்து தெரிந்து கொள்ளும்படி அமைந்த இரகசியச் செயல்கள் அல்ல. நாள்தோறும் பலர் பிறப்பதையும் இறப்பதையும் கண் கூடாக நாம் கண்டு கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த வாழ்க்கை நெடுங்காலம் இராது என்பதைச் சாத்திரம் படித்துத்தான் அறியவேண்டும் என்பது இல்லை. கடவுள் உண்டு என்ற உண்மையை மறுப்பவர் இருக்கலாம். உடம்பு அழியும் என்ற உண்மையை மறுப்பவர் யாரும் இல்லை.

இந்த உடம்பு என்றோ அழியும் என்பது உண்மையானலும், நமக்கு அது நனருகத் தெரிந்தாலும், நாம் செய்யும் காரியஙகளைப் பார்த்தால், பலகாலம் நிலையாக இந்த உலகில் வாழ்பவர்கள் செய்வனபோலத் தோன்றுகின்றன. உலகில் பிறந்து வாழ்கிறவன் சில காரியங்களைச செய்யத்தான் வேண்டும். இந்த உடம்பு செத்துத்தானே போகும் என்று சும்மா இருக்க முடியாது. ஆனால அப்படிச் செய்யும் காரியங்களில் இன்னதற்கு இன்னது என்ற வேறுபாடு உண்டு.

நாம் மானததைக் காபபாற்றிக் கொள்ள உடை அணிய வேண்டும். பசியைப் போக்க உணவு கொள்ள வேண்டும். தங்கியிருக்க ஓரிடம் வேண்டும். இவை உடம்பைச சார்ந்தன. ஆடைகளை ஆயிரக் கணக்காக வாங்கிச் சுமத்துவதில் பயன் இல்லை. ஆடை இன்றியமையாததானலும் எப்போது எவ்வளவு வாங்க வேண்டும் என்ற வரையறை வேண்டும். கிடைக்கிற பணம் முழுவதுக்கும் ஆடைகளையே வாங்கிக் கொண்டிருந்தால், உணவுக்கும் மற்ற வசதிகளுக்கும் பணம் வேண்டாமா?

இல்லறததின மெயம்மை இயலபை மறந்தெழுந்து,
புல்லுகினற போகமே, பொருளாகி நினறதுவே.

உணவு அவசியம். உடையைவிட உயிரைப் பாதுகாக்க உணவு மிகமிக அவசியம். அதற்காக இருபத்து நான்கு மணி நேரமும் உணவை உண்டு கொண்டே இருப்பார்களா? கையில் கிடைத்த பொருளுக்கெல்லாம் அரிசியே வாங்கிக் குவித்து விடலாமா? உடலோடு தொடர்புடைய பண்டங்களைப் பெறுவ திலும், அவற்றிற்காகப் பொருள் ஈட்டுவதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும் மனிதன் கவனம் செலுத்தத்தான் வேண்டும். ஆனால் தன் கவனம் முழுவதையும் அவற்றிலே செலுத்தக் கூடாது; அவற்றிற்கு மேலும் மனிதன் பெற வேண்டியவை உள்ளன.

மனிதனுடைய உள்ளம் உயரவேண்டும். அவன் அறிவு விளக்கம் பெறவேண்டும். அதற்கு வாய்ப்பான கல்வி பயில வேண்டும். அந்தத் துறையிலும் எல்லாக் காலத்தையும் கழித்து விடக்கூடாது. உடம்புக்கும் உள்ளத்துக்கும் மேலே உயிர் இருக்கிறது. அந்த உயிர் இல்லாவிட்டால் உடம்பும் இல்லை; உள்ளமும் இல்லை. வீட்டுக்கு அலங்காரம் பண்ணிவிட்டு, உள்ளே இருக்கும் ஆளைப் பட்டினி போடலாமா? உடம்புக்கும் உள்ளத்துக்கும் வேண்டியவற்றைச் செய்யாமல் இருப்பது அத்தகையதுதான்.

உயிருக்கு இன்பம் தருவது இறைவன் அருள். அதனைப் பெறும் முயற்சியில் மனிதன் ஈடுபடுவது எல்லாவற்றிலும் அவசியமானது. அதற்கு உடனே பயன் உண்டு என்று சொல்ல முடியாது. உணவுக்காக மனிதன் உழுது பயிர் செய்கிறான். மண்ணைக் கிண்டி உழும்போது, "இதனால் உணவு எப்படிக் கிடைக்கும்? இந்த மண்ணையா உண்பது என்று கேட்கலாமா? உழுவது முதல் அறுவடை வரையில் பல முயற்சிகளைச் செய்த பிறகே உணவு கிடைக்கிறது. பல மாதங்கள் வேலை செய்த பிறகே அறுவடை கைகூடுகிறது.

உலகமிது, தானே உருவான(து) என்று,
கலகமிடக் கற்றுரை, எங்கும்காண் கின்றோமே.

உயிருக்குரிய முயற்சியையும் இடையருமல் பல காலம் செய்து வந்தால்தான் பயன் உண்டாகும்.

நாம் செய்துகொண்டு வரும் காரியங்களை வரிசைப் படுத்தி, இது உடம்புக்காகச செய்வது, இது உள்ளத்துக்காகச் செய்வது, இது உயிருக்காகச செய்வது என்று வகைப் படுத்திப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் முன் இரண்டு துறைகளில் அமைந்தவையே பெரும்பாலனவாக இருக்கும். அவற்றிலும் உடம்புக்காகச் செய்து கொள்வனவே 99 சத விகிதம் என்று சொல்லிவிடலாம். வீடு, வாசல், அறை, தரை, கார், மாடு, ஆடை, ஆபரணம், மனைவி, மக்கள்—இப்படி வருகின்ற யாவுமே உடம்பினேடு நேரான தொடர்போ மறைமுகமான தொடர்போ உள்ளவைகளே. ஆடை நேரான தொடர்புள்ளது; பருத்திக் காடு மறைமுக மான தொடர்புள்ளது. சோறு நேரான தொடர்புள்ளது; ஏர் மறைமுகமான தொடர்புள்ளது. இப்படி ஆராய்ந்து கொண்டே போனல் இந்த வாழ்க்கையில் பெரும் பகுதி உடம்பின் சுகத்துக்காகவே கழிகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இதற்குக் காரணம் இந்த வாழ்வு நிலையாதது என்ற எண்ணம் நம் உள்ளத்தில் ஆழ வேரூன்றவில்லை. அப்படி ஊனறி யிருந்தால் மற்ற எதைச் செய்தாலும் செய்யாவிட்டா லும் உயிருக்கு வேண்டியதை முதலில் செய்வோம்.

இந்த வாழ்விலே நமக்கு எவ்வளவு பற்று இருக்கிறது என்பதை நம்முடைய அநுபவத்திலே பல வகையில் கண்டு கொள்ளலாம். போர் நிகழ்ந்த காலத்தில் பர்மாவிலிருந்து ஜப்பான்காரனுக்குப் பயந்துகொண்டு இந்தியாவுக்கு நடந்து வந்த குடும்பங்கள் பல. அந்தக் குடும்பத்தினரிற் பலர் இடை வழியிலே இறந்து விட்டார்கள். கணவன் இறப்பதைக்

சிறந்தனசெய் ! இன்றேல் செத்துமடி! என்றல்
மறந்தபினர், வாழ்வு ஒளிமங்கிப் போயதுவே

கண்டு பிழைத்து வந்த மனைவியும், பிள்ளையை விட்டு வந்த தாயும், மனைவியை விட்டு வந்த கணவனுமாகப் பலர் உண்டு. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருக்கும்போது, தாய்—குழந்தை, கணவன்—மனைவி என்ற ஒட்டுறவு பறந்து போகிறது. தம் தம் வாழ்வே தமக்குச் சிறந்தது என்ற பற்றே அவ்வாறு செய்வதற்குக் காரணமாக நிற்கிறது. வாழ்விலே நமக்குள்ள பற்றுக்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

தொழுநோய் உடைய பலரை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு நாளும அவர்கள் படும் அல்லல் கணக்கில் அடங்காது. அவர்களுககுத் தம் உயிரை மாய்த்துக் கொள்ள வேணடும் என்ற எண்ணம் இருந்தால் அப்படிச் செய்து கொள்ளப் பல உபாயங்கள் இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் அவ்வாறு செய்யாமல் அழுகி ஒழுகும் உடம்புடன் இருக்கிறார்கள். வாழ்வில் உள்ள பற்றே அதற்குக் காரணம்.

இபபடிப் பலபல உதாரணங்களைக் காட்டலாம்.

இவ்வாறு பற்றி நிற்கிற வாழ்வை நம் விருப்பத்தின் படியே, நாம் வேண்டுகின்ற காலம் மட்டும் நீட்டிததுக் கொள்ளும் வாய்ப்பு நமக்கு இருக்கிறதா? அது சிறிதும் இல்லை.

"யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்" எனறு ஞான சம்பந்தர் சொல்வார். ஆதலால் இந்த உடம்பையும் வாழ்வையும், நிலையில்லாத பொருளை உவமையாக்கி இழித்துக் கூறுவது பெரியோர் இயலபு. நீரிற் குமிழி என்றும், நீர்மேல் எழுத்து என்றும், நீரின அலை எனறும் சிலர் கூறினர். இடி கரை என்றும், ஆற்றங் கரை மரமென்றும், மின்னல் என்றும் சிலர் கூறினர். அருணகிரியார் அநுபூதியால் இது 'மின்னே நிகர் வாழ்வு என்கிறார். 'இதை நிலையென்று கருதி இதுவே பயன் என்ற எண்ணத்தோடு வாழ்கிறேனே!' எனறு அங்கலாய்க்கிறார்.

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான் என்னே! விதியின் பயன் இங்கிதுவோ ? (தொடரும்)

8. திருமுருகாற்றுப் படையின் சிறப்பு.

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

இனி திருமுருகாற்றுப் படையின் பெருமையைப் பற்றி ஒரு சிறிது கூறுவாம் ;

சேக்கிழார் பெருமானுக்குச் சிவபிரான் " உலகெலாம் " என முதலெடுத்துத் தந்ததுபோல முருகரும் நக்கீரருக்கு " உலகம் " என முதலெடுத்துத் தந்தனர் எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இது.—

" தலமகிழ் தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன் சென்று
நலமுறு கனவிற் சொல்வான் நற்றமிழ் முருகன் நம்பேர்
பலமிகு தமிழினூலோர் பாட்டாற்றுப் படையா நம்மை
உலகமென வெடுத்துப் பாடென் றுள்ளுறை கொடுத்தா
எனவரும் செய்யுளால் விளங்கும். [னன்றே".

அருணகிரியாரும் " உலகம் உவப்ப " என முருக பிரானே முதல் எடுத்துத் தந்தனர் எனக் கூறியுள்ளார். இதனை,

" அடிமோனை சொற்கிணங்க " உலகாமுவப்ப " என்றுன்
அருளா லளிக்குகந்த பெரியோனே "

என வரும் திருப்புகழால் (203) அறியலாகும்.

" இத் திருமுருகாற்றுப்படையின் சுவை எத்தன்மைத்து, அச் சுவையை எத்தனைப் பிரியமுடன் எம்பிரான் பருகினர் என்பது ஆராயற்பாலது; தேவசேனையின் கலவி இன்பத்தினும் கீரர் சொல்லே அதிகமாக முருகருக்குத் தித்தித்தது என்றார் அருணகிரியார்.

கண்டதே காட்சி,மனம் கண்டதே கோலம்,வாய்
விண்டதே தீர்பபெனனல், வீறுகலி சோதனையே.

"கைம்மா மயில் செவ்வி நக்கீரர் சொல் தித்தித்ததே".
(கந்தரந்தாதி 51)

"ஓதில், உன்னிய உன்னியாங்கு உதவுவதாகிப் பாவுள்
முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை"
"வள்ளி கன்னலும் அமுதும் தேனும் கைக்கும் இன்
தீஞ்சொல் மாற்றி
தன்னிகர் புலவன் கூறும் தமிழ்"—எனவருவது
சீகாளத்தி புராணம்.

9. திருமுருகாற்றுப்படையை ஓதும் முறை—

வேதம் ஓதுவதுபோல கீதை இசை கூட்டி அதை ஓத வேண்டும்.

"கீத இசை கூட்டி, வேதமொழி சூட்டு கீரரியல் கேட்ட
கிருபைவேளே"

என்பது அருணகிரியாரின் பொன்வாக்கு.

10. திருமுருகாற்றுப்படையைப் பற்றிய பிறர் பாடல்கள்.

1. 'கவி புகலுக' என்று முருகர் நக்கீரனுர்க்கு அறிவித்தும், அவர் செநதமிழ் கூறுத குறையால் இடருற்றனர் என்பது—

"உனதின் புறுகவி புகலென் றநுதின
முற்றறி விததிடவும்
உயர்செந் தமிழ்சிறி தறைகின் றிலனென
ஒட்டு கவிபபுலவன்

ஆல மரம்பெரிது, அம்மரத்தின் காய்சிறிதாய்
பாலித்தான் உள்ளத்தின் பண்பெண்ண வேண்டாவோ.

இடருங் குகையுறு சிறையுந் தவிர்தரு
நற்கவி சொற்றிடலும்
முனிவின் றெதிர்வரு முருகன் தணிகையின்
முத்த மளித்தருளே".

எனவருந் திருத்தணிகைப் பிள்ளைத் தமிழால் அறியலாகும்.

2. கீழ்க்காட்டியுள்ள பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் மேற் கூறிய சரித்திர விளக்கங்களை எடுத்துக் காட்டுவன ஆகும்.

"ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரரசின்
இலை பார் விழிற் பறவையாம்
இது நிற்க நீர்விழிற் கயலாம் இதன்றியோர்
இலையங்கும் இங்குமாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதானாக, அப்
பாதியும் சேலதாகப்
பார் கொண்டிழுக்க அது நீர்கொண்டிழுக்க இப்
படிகண்ட ததிசயமென
நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மது கொண்டு போய்
நீள்வரை எடுத்ததன் கீழ்வைக்கு மதுகண்டு
நீதிநூல் மங்காமலே
சீர்கொண்ட நகீரனைச் சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
திரை யெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை யாடியருளே."

—(செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் 13.)

மிகப்பெருத்த பூசணிக்காய், மென்கொடியிற் காய்க்கும்;
இகத்து அனுபவத்தை எண்ணமனம் இன்புறுமே.

3. ஓராயிரம் பேரை வருடத்தில் ஒரு நாளில்
உண்கின்ற கற்கி முகிதான்
ஒன்றுகுறை யாகிவிடு மன்று நக்கீரர் வர
ஓடிப் பிடித்தவரையும்
காராய குனறத்து அடைத்துரிய நியதிக்
கடன் துறை முடிக்க அகலக்
கருதிமுரு காறவ ருரைத்தருள நீலக்
கலாப மயில் ஏறி யணுகிப்
பேரான குன்றந் திறந்திவுளி முகியைப்
பிளந்துநக் கீரர் தமையும்
பெரியவேல் கொண்டுபுனல் கண்டுசுனை மூழ்கிப்
பிரான் முகவி நதியின் மேவச்
சீராய திருவருள் புரிந்தகர னூராளி
சிறுதேர் உருட்டி யருளே
செயசெயென அமரர் தொழ அசுரர்முடி சிதறுமுனி
சிறுதேர் உருட்டி யருளே.''

—(திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் 93)

நக்கீரனார்—கீரனார் பெயர்; ந-சிறப்புப் பொருளைத் தருவது. மதுரை மேலை மாசி வீதியில் 'நக்கீரர் கோயில்' உளளது. திருப்பரங்குன்றத்தில் 'முத்துக் குமாரர்' பக்கத்தில் இவர் திருவுருவம் உளது. திருக்காளத்தியில் நக்கீரர் பூசித்த நக்கீர லிங்கம் உளது.

நக்கீரர் வரலாறு முற்றும்.

வல்லான் வகுத்த வளத்தை யுணராமல்,
கல்லாம் மனத்தர் கடவுணிந்தை பேசுவரே.

வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள்

(கி. வா. ஜகந்நாதன்)

மகாளய புண்ணியத் திதி யென்று நம்மவர் போற்றும் மகாளய அமாவாசையன்று, வெள்ளிக்கிழமைத் (28-9-62) தினம் இவ்வுலகில் பலருடைய உள்ளத்தை இழுத்து அன்பிலே கரைத்து நலம் செய்த சுடர் ஒன்று, பெருஞ்சுடராகிய இறைவனுடன் ஒன்றிவிட்டது. அந்தச் சுடரால் விளக்கம் பெற்ற உள்ளங்கள் அமாவாசை இருட்டில் திக்குத் தெரியாது தடுமாறிக் கலங்குவது போலக் கலங்குகின்றன. வடகுமரையில் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் தாம் வாழ்ந்திருந்த கோயிற் குடிலையும், மெல்லிய சடலமாகிய குடிலையும் நீத்துச் சோதியுட் சோதியாகி விட்டார்கள். இறுதிக் கணம் வரைக்கும் அவர்கள் நினைவும் உரையும் தடுமாறாமல் இருந்து ஒரு கணத்தில் மின்னல் சிமிட்டினாற்போலே இந்தச் சடலத்தை உதைத்துத் தள்ளிச் சென்றுவிட்டார்கள்.

ஸ்ரீ சுவாமிகளை அறிந்தவர்கள் அவர்களுடைய அருமையை நன்கு அறிவார்கள். விளக்குப் போலச் சுடர்விட்ட அவர்களுடைய கண்கள் இரண்டையும் கண்டு சொக்கிப் போனவர் பலர். அப்படி ஒளிவிடும் கண்களை வேறு இடங்களிலே பார்ப்பது மிகமிக அரிது. அவர்கள் நிஷ்டாநுபூதியில் நிறைந்தவராக இருந்ததனால் அந்த கண்கள் அந்த நிறைவைக் காட்டிக் கொண்டிருந்தன.

அவர்கள் துறவுக் கோலம் பூணவில்லை; தம்மைச் சுவாமிகள் என்று கூறிக்கொள்ளவில்லை; தம்மை யாரும் வணங்க வேண்டும் என்று விரும்பவில்லை; புகழாசை எள்ளளவும் அவர்களிடம் இல்லை. ஆனால் அவர்களிடம் நிறைந்திருந்த அநுபவம் பெரிது. "நான் என் கணவனுடன் இன்புற்றேன்.

பேசுகின்ற சூரியனே, தெய்வப் பிரதிநிதி;
நேசமுளார் உள்ளத்தில், குடியிருக்கும் நிச்சயமே.

என்று விளம்பரமா செய்துகொள்கிறுள் பருவமங்கை? அதை வெளிவிடாமல் நாணத்துடன் மறைக்க அல்லவா முயல்கிறுள். அநுபூதி பெற்றவர்கள் அதைப் பிறருக்குச் சொல்லவேண்டு மென்றே, பிறர் அதற்காகத தம்மைப் போற்ற வேண்டு மென்றே நினைப்பது அத்தகையது தான்" என்று அவர்கள் கூறுவார்கள்.

யாரிடமும் குழந்தை போலப் பழகும் இயல்புடையவர்கள் சுவாமிகள். உலகத்தில் உள்ள பல திறத்த மக்களும் அவர் களை அண்டினுர்கள். ஏழைகள் வருவார்கள்; பணக்காரர்கள் வருவார்கள். தொழிலாளி வருவான்; ஹைகோர்ட்டு ஜட்ஜ் வருவார். பண்டிதர் வருவார். பாமரன் வருவான. கிழவி வருவாள். குமரி வருவாள். குழந்தை வருவான்; அவன் தாததா வருவார். குடும்பி வருவான; உலகில் பெரிய சாமி யார் என்று புகழ்பெற்றவர் வருவார். யாவரிடமும் இன் சொல்லுடனும் அனபுடனும் பழகி அவரவர்களுக்கு இங்கித மான வார்த்தைகளைக் கூறும் சால்புடையவர்கள். யாரையும் மனம் புண்படப் பேசத் தெரியாதவர்கள். தாம் ஏதோ பெரிய நிலையை அடைந்தவர் போலவும் மற்றவர்கள் தாழ்ந்தவர் போலவும் எண்ணிப் பிறருக்கு உபதேசம் செய்யும் இயல்பு எல்லோருக்குமே இருக்கிறது. சுவாமிகள், சாதுக்கள், சந்நி யாசிகள் என்பவர்களிடம் அதுதான் அதிகமாக இருக்கிறது. ஆனுல் ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் அப்படிச செய்கிறதில்லை. அவரவர்களைக் கண்டு பாராட்டுவார்கள். அந்தப் பாராட்டே அவர்களை மேனமேலும் உயர்த்திவிடும்.

இயற்கைக் காட்சிகளைக் கண்டால் அவற்றிலே சொக்கிப் போய் மெய்ம்மறந்து நின்று விடுவார்கள். குயிலின் ஓசையை யும், வண்டின் ரீங்காரத்தையும், குருவியின குரலையும் மணிக்

காலைப் பொழுதில், கதிரோன் எழுவதனைச்
சீலத்தார் கண்டு சிவசிவஎன் கின்றுரே.

கணக்காகக் கேட்டு ரசிப்பார்கள். நல்லபடம், இனிய கவிதை, சுவர சுத்தமான சங்கீதம் இவற்றிலே உள்ளத்தைப் பறிகொடுத்தவர்கள்.

யார் அவர்களுடன் பழகினாலும் அவருடைய நலந்தீங்குகளை விசாரித்து அவர்களுடைய குடும்பத்தில் ஒருவரைப் போலே பழகும் இயல்பு அவர்களிடம் இருந்தது. தனக்கென்று ஒன்றும் இல்லாத கண்ணாடியில் அவரவர்கள் முகம் தோற்றுவது போல, பற்றற்ற அவர்களிடம் எல்லோரிடமும் அன்பு தோன்றியது. ஜீவகாருண்யமே வடிவமானவர்கள் அவர்கள்.

ஈரோட்டுக்கருகில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மரபில் கொங்குப் பிராட்டியார் என்னும் வகையில் திருவவதாரம் செய்த அவர்கள், இளமையிலேயே சோதி தரிசனம் கண்டு அதில் தம்மைப் பறி கொடுத்தவர்கள். அவர்களுடைய தந்தையார் இராமாயண பாரத உபந்நியாசம் செய்து வந்தார். சுவாமிகள் சில காலம் வேத அத்தியயனம் செய்தார்கள். சில காலம் கோயில் பூஜை செய்தார்கள். பிறகு தம் உயிருக்கு உணவு போட வேண்டும் என்ற பசி மிகுதியாகி விட்டபடியால் தனிமையை நாடினார்கள். காடுகளில் சஞ்சாரம் செய்தார்கள். பலகாலம் மரங்களில் ஏறி அங்கிருந்தபடியே சாதனை செய்து வந்தார்கள்.

வடகுமரையில் அவர்களுடைய உள்ளம் அமைதியைக் கண்டது. அங்கே ஸ்ரீ அருணாசலம் பிள்ளையும் அவர் துணைவியார் ஸ்ரீமதி அகிலாண்டம்மாளும் சுவாமிகளுக்கு உணவு வழங்கும் பாக்கியத்தை மேற்கொண்டார்கள். அவர்களுடைய மாட்டுக் கொட்டிலில் நாட்கணக்காக நிஷ்டை கூடி இருந்தார்கள். பல சமயங்களில் அந்த அம்மையார் சுவாமிகளுக்கு வாயில் சோற்றை ஊட்டியதுண்டு.

வான்பொழிந்து, காலத்தில் வளரும் பயிருயிர்கள்
தான்வாழச் செய்யும் தற்பரனை எண்ணுதுமே.

அந்தக்காலத்தில் சுவாமிகளைப்பற்றிப் பலபல செய்திகள் நடமாடின. அவர்கள் சித்தியில் வல்லவர்களென்றும், ஒரே சமயத்தில் பல இடங்களில் தோற்றினார்கள் என்றும் மக்கள் கூறுவார்கள். சுவாமிகள் அவற்றை உண்மையென்று நம்பாதீர்கள் என்று சொல்வார்கள்.

ஒருவாறு இஷ்டானுபூதி கைவந்த பிறகு அவர்கள் வடகுமரை ஸ்ரீகாளஹஸ்தீசுவரர் கோயிலுக்குள் ஒரு குடிலை அமைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்திருந்தார்கள். நாளடைவில் அவர்களை உணர்ந்தவர்கள், அடிக்கடி வந்து தரிசனம் செய்துகொண்டு போனார்கள். சுவாமிகளும் தம்மை வேண்டி விரும்பினவர்கள் விருப்பப்படி பல இடங்களுக்குச் சென்று வந்தார்கள்.

தைப்பூச விழாவைச் சில ஆண்டுகள் மிகச் சிறப்பாக வடகுமரையில் நடத்தினார்கள். அந்த விழாவிலே கலந்து கொண்டவர்களுக்கு ஒரு புதிய தெய்வீக அநுபவம் உண்டாயிற்று.

காஞ்சி காமகோடி பீடாதிபதியவர்கள் ஒருமுறை வடகுமரைக்கு அருகில் யாத்திரை செய்தபோது ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் அவர்களை வணங்குகிறார்கள்; "இவர் நல்ல அநுபூதிமான" என்று ஆசார்ய சுவாமிகள் சொன்னார்கள். கவமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் சுவாமிகளுக்காகச் சில கீர்த்தனங்களைப பாடித் தந்திருக்கிறார்கள்.

சுவாமிகளுக்குச் சில காலமாக இருதயத்தில் ஏதோ கோளாறு இருந்தது. இருதயம் இயலபான அளவிலும் பெருத்திருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையில் அவர்கள் பெரிய இதயம் படைத்தவர்களே. மூன்று ஆண்டுகளாக அந்தக் கோளாறு இருநதும் அவர்களுக்கு அபாயம் நேரவில்லை.

இயற்கை எதையும் வீணாக்கல் இல்லை,
செயற்கை குப்பை எரு, கமலம் சேற்றிலுதிக் கின்றதுவே.

அதோடு பல இடங்களுக்குப் போய் வந்தார்கள். அவர்களைப் பரிசோதித்த டாக்டர்கள் யாவரும் அவர்கள் உயிருடன் இருப்பதே பெரிய ஆச்சரியம் என்று சொன்னார்கள்.

தம்முடைய ஐம்பதாவது பிராயத்தில் சுவாமிகள் இந்த உடற் சிறையினின்றும் விடுதலைபெற்று, அன்பர்கள் உள்ளச் சிறையில் புகுந்து கொண்டார்கள். செப்டம்பர் மாதம் மாலை 5-30 மணிக்கு அவர்கள் சித்தி அடைந்தார்கள். மறுநாள் அவர்களுடைய திருமேனியைக் கோயிலுக்கு அருகில் ஓரிடத்தில் வைத்துச் சமாதி செய்து அன்பர்கள் பூசை வழிபாடு ஆற்றினார்கள்.

அவர்களோடு பழகிய அன்பர்கள் சிறிதும் எதிர்பாராமல் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்து விட்டது. அன்பின் திருவுருவம், அநுபூதிச செல்வர், அருள்வாரி, தமிழின்பம் மாந்தும் வண்டு, கலையழகில் சொக்கும் ரசிக சிகாமணி. ஞான அரசு இப்படி எத்தனை வகையில் சொன்னாலும் அவர்களுடைய இயல்பைச் சொல்லி முடித்ததாகாது "மேவினார் பிரிய மாட்டா விமலனார்" என்று கண்ணப்பர் காளத்தி யப்பரைச் சொலகிறார். அதைத் தான் சுவாமிகள் திறத்திலும் சொல்லத் தோன்றுகிறது. அந்தப் பெருமானுடைய சுடர் விழியும் வெண்கலச் சிரிப்பும் இங்கித இன்சொலும் பழகினவர் உள்ளத்தை விட்டு என்றும் நீங்கா என்பது திண்ணம்.

உலகம் தொழிற்சாலை ; உற்றசெயல் நல்லணிகள் ;
நிலையான இந்நிலை, நீடித்து நிற்கிறதே.

சமரசம் 8

அபேத திருச்செந்தில் ஆண்டவன்

(ரஸபதி)

முக்காணியர் முதன்மை

காலையில் எழுவார். கடனை முடிப்பார். நீராடுவார். அனுட்டிப்பார். செந்தில் ஆண்டவனைச் சிந்திப்பார். அன்பொடு அநவரதமும் வந்திப்பார், அந்த அந்தணர்கள்.

நெல்விற்கு உமி; நீர்க்கு நுரை; பூவிற்குப் புல் இதழ். அதுபோல், குற்றமே உயிர்களின் குணம். அக் குற்றத்தைப் போக்க அறியாமல், மேலும் உலகரொடு கொள்ளும் உறவு, சூனியத்திற்கு ஆலவட்டம் சுற்றுவது போல்வது. இதை அதிகம் அறிந்தவர் அம் மேலோர்கள்.

அவர்கள் ஆறுமுகப் பெருமானை ஆராதிக்கும் போதெல்லாம், ஆறுமுக ஐயா! தேறுமுகம் தா! அயன் உலகில், விண்ணில், மண்ணில் வழிபடும் சுதந்தர வாழ்வை யளித்தனை; இப்பேறு, என்றும் அடியேற்கு இருக்க அருள் என்று, ஏத்திப் போற்றி இறைஞ்சினர்.

அவர்கள் வழிபாட்டை மகிழ்ந்த வேல் பரமன், விக்கிரகத்திலிருந்து ஒருநாள் வெளிப்பட்டான். கண்ட அந்தணர்கள், கைகுவித்தனர். விழ்ந்து பணிந்தனர். விநயம் காட்டினர்.

மெய்யன்பர்களே! திரிகரண சுத்தியர் திரிசுதந்தரர் என்று, எங்கும் ஞானிகள உங்களை ஏத்துகின்றனர். நீங்கள் இரண்டாயிரவர்; உங்களுள் யான ஒருவன்; உலகம் இதையும் உணர்ந்துளது. உங்கட்கு உதவி செய்தோர், எம்மை வழிபட்ட பயனை எயதுவர் என்று அருளி, திருவுருக் கரந்தது தெய்வம்.

தேன்திரட்டும் வணடுகள்போல், தெய்வஅருள் நேர்விக்கும்
வான்சிறந்த கால, வழிபார்ப்பர் ஞானிகளே.

வைதிக வழிபாட்டில் மனம் வைத்து, அன்றும் இன்றும் அமலன் திருப்பணிக்கே தம்மை அர்ப்புணித்த அவர்களின் வாழ்க்கை வளம்பெற, வசதி செய்பவர்கள், வாழப் பிறந்த பெருமக்கள்.

ஆற்றங் கரையில் தண்ணீர். அடுப்பங் கரையில் வெந்நீர். கவலை வாழ்க்கையில் கண்ணீர். பரமன் வழிபாட்டில் பன்னீர். இது பழங்காலப் பாட்டிகளின் பழமொழி. இது, இறைவழிபாடு, அடியர் வழிபாடு செய்பவர் வாழ்க்கை சிறப்படையும் என்பதை, அருமையாக நமக்கு அறிவிக்கிறது அல்லவா !

செந்தில் சிறப்பு

சீரலைவாய் என்பது, கடற்கரை ஓரத் தலம் என்னும் பொருளை யுடையது. எங்கும் கடல் இருக்கின்றது. எனினும், கடவுள் ஆலயத்தை அடுத்த கடலுக்குத்தான் மதிப்பதிகம். இங்குள கடல், வதனாரம்பம் என்று வழங்கும் பெயரினை யுடையது.

கந்தமாதன அதிதேவதை, வாழக் கருதி இங்கு நாள் தோறும் வருகிறது. நீராடுகிறது. செந்தில பெருமானைச் சேவிக்கிறது. காண்பார் கண்கட்கு மலையுருவில் காணப்படுகிறது.

மூலையில் இருக்கும் ஆணவத்திற்கு முடிசூட்டுவார்போல், எனக்கும் ஐந்து தலை ; சிவத்திற்கும் ஐந்து சிரம் என்று, பிரம தேவர் ஒருநாள் இறுமாந்தார். அதை யறிந்த பயிரவர், அவரது ஒரு தலையை அரிந்தார். உபாதை பொருத பிரம தேவர், வைகுநதத்திற்கு ஓடினர். விஷ்ணுவான தந்தையிடம், தன் தவறுகளை விவரித்தார்.

உணர்ந்த திருமால் உணர்த்தியபடி, ஆறெழுத்தைச் சிலகாலம் உருவேற்றினர். அறுமுகப் பரமன் வந்து அறிவித்த

சொந்தவினை ஆன்மாவின் சஞ்சிதமாம் ; அன்னதன்பின் வந்தவினை, பாதிக்க வாய்த்தபிரா ரத்துவமே.

படி, ஐம்முகச் சிவத்தைப் பலகாலம் சிந்தித்தார். விமல சிவனூர் வெளிப்பட்டார்.

நான்முகா! புயற்காற்று இயற்கை நிகழ்ச்சி; விஷமப் பிரசாரம், விபரீதததை விளைவிக்கும். வதனாரம்பத்தில் நீராடு. செந்தில் ஆண்டவன விளங்கும் கோயிலில், விமானமாக நீ விளங்கி யிரு! பிரமகற்ப இறுதியில் பேறுதருவம் என்று, ஓதி உருககரந்தார் அந்த உமை மணாளர். அனறு முதல் இன்று வரை, சிறக்க அப்பணியைப் பிரமதேவர் செய்து வருகின்றார்.

கலிங்க மன்னன மகள் கனக சுநதரி. பொதிகைத் தாமிர பரணியில, அவள் ஒரு நாள் நீராடப் புறபபட்டாள். இடையில் வந்த தும்புரு முனிவரை, குதிரை மூஞ்சி சாமி இவர்தானோ? என்று, ஏதம் என்று அறியாமல் எள்ளி நகைத்தாள்.

பெண்ணே! தெளிந்தவர்களை நிந்தித்த தீமை, வீணாக எவரையும் விட்டுவிடாது. சாக்கடைச் சேறு சந்தனம் என்று வந்தால், பொலலா அந் நாற்றத்தை பொறுப்பது எப்படி? அடுதத பிறப்பில் குதிரை முகம் ஆவை! அதற்கு உரிய துனபத்தை அனுபவிப்பை என்று, கொடிய சாபத்தை முனிவர் கொடுத்தார்.

கனகசுந்தரி, சில நாட்கட்குப் பின் இறந்தாள். அடுத்து மதுரையில், உக்கிர பாண்டியர் மகளாக உதித்தாள். அங்க மெல்லாம் சுந்தரம். முகம் மட்டும் குதிரை முகம். வேந்தர் மனம், அது கண்டு வேதனை யடைந்தது.

அரசே! மகளின் முனவினை இது! வருநதிப் பயனில்லை. நிமல நதிகளில் நீராடச் செய்! காலம் வரும். மதிமுகம் ஆவள் மகள் என்று, அசரீரி வானில் அதிர்நதது.

ஊடலொடு கூடல், உணவுறங்கல், தேடுபொருள்
நாடல், ஆ காமியமென் றோதுகின்றார் நல்லோரே.

உக்கிரபாண்டியர், தன் மகளை, அவளைப் பெற்ற தாயுடன் பல்லக்கில் ஏற்றினர். தூய மந்திரிகள், மற்றவர்கள் தொடர, அரிய தீர்த்த யாத்திரைக்கு என்று அனுப்பினர். புறப்பட்டவர்கள், உலகம் முழுதும் சென்றனர். கடலில், நதிகளில், பொய்கைகளில் முழுகினர். இடையில் பதினாறு ஆண்டுகள் பறந்தன. இறுதியில் செந்திலை யடைந்தனர். அன்று சேய். இன்று அங்க சுந்தரி, மங்கைப் பருவம் அடைந்துள்ள். பலநாள் வருந்திய அப்பாவை, முதனமை வதனாரம்பத்தில் மூழ்கி எழுந்தாள். என்ன அதிசயம்! களங்கமற்ற மதிபோல முகம் கவினியது. யாவரும் மகிழ்நதனர். விவரம் அறிந்த வேந்தர் விரைநதார். தானும் கடலில் மூழ்கினார். செந்திலான் கோயிலில், சிறந்த திருப்பணிகள் செய்தார். இந்தக் காரணங்களால், செந்தில் கடல், வதனாரம்பம் எனும் பெயரில் வாழ்கிறது.

ஒரு சமயம் திரிசுதந்தார்கள் விண்ணப்பித்தபடி, எம்மான தன் வேலை ஏவினன். உறுத்து நிலத்தில அவவேல் ஊடுருவியது. அதனால் பாதல கஙகை பூதலம் வநதது. முருகன் அதனில் முதலில மூழ்கினன. அடுதது நியதி செய்த அநதணர்கள், அதனில் நீராடினர். அதன பெயர் கந்த புஷ்கரணி. அற்புதமானது அப் பொய்கை.

பகல் முதல் யாமத்தில், செந்திலாண்டவனை, பிரமதேவர் வழிபடுகிறார். 2-ஆவது யாமத்தில், அருநதவ முனிவர்கள் ஆராதிக்கின்றனர். 3-ஆவது யாமத்தில்,புனிகநதர்வ சித்தர்கள் பூசிக்கின்றனர். 4-ஆவது யாமத்தில, திக்குப் பாலகர்களின் தொழுகை. இரவு 5-ஆம் யாமத்தில், அவுணர்களும் ஆதிசேடனும் வணங்குகினறனர். 7-ஆம் யாமத்தில், ஸ்ரீ வள்ளி தேவயானையர் வழிபாடு நடைபெறும். 8-ஆம் யாமத்தில், புனித கங்கை முதலிய நதி தேவதைகள போற்றுகின்றனர்.

கடவுளை யுள்ளத்தில் காண முயன்றார்,
திடஞானம் எய்தித் திருவாளர் ஆயினரே.

இப்படி அருவமாக வரும் அவர்களின் வழிபாட்டால், என்றும் திருச்செந்தூர் மகிமை எய்தி யிருக்கின்றது.

உலக வடிவம்

பிரபோ! உமது சொரூபத்தை, அடியேன் காணுமாறு காட்டியருளும் என்று, வீரவாகு தேவர் ஒருநாள் விண்ணப் பித்தார். அவரது அன்பிற்கு இரங்கிய ஆண்டவன், அண்ட பிண்ட சராசரம் யாவுமான தம் சொரூப லட்சணத்தை, விரி வாக எடுத்து விளக்கினன.

அறுமுக அரசே; உமது புனித உபதேசம், செவியுள் பாய்ந்தது; சிந்தையில் பதிந்தது; அக்காட்சியைக் கண்களாலும் காண ஆவலிக்கிறது ஏழை மனம் என்று, மேலும் மேலும் வேண்டினர்.

வீரவாகு! புனித சொரூபம், ஊனக் கண்கட்குப் புலனு காதது. தோஷ திருஷ்டி, மாதுர் திருஷ்டி யிலார்க்கு உரிய ஞான திருஷ்டியை அருள்கின்றேம். அதன்மூலம் அறிந்து கொள் எனறு அருளினன் அத்தன்; அதனபின், அண்ட மெலாம் திருமேனியில் பேன் முட்டைகள்போல் தோன்றும் அரிய தன் பாரமேச்சுரத் திருமேனியைக் காட்டினன்.

கண்டதும் வீரவாகு கதறினுர். அடைக்கலம் பிரபோ! கூரிய எம் கண்கள், காணக் கூசுகின்றன. அஞ்சுகிறது நெஞ்சம். போதும் பெரும! அபயம் அபயம் என்று அலறினுர்.

உடனே, சாந்த விக்கிரக ரூபமாகப் பெருமான் விளங் கினன். வீரவாகு! பாலூட்டும் பருவம், சோறூட்டும் காலம், தானே உண்ணும் சமயங்களை அறிவள் தாய். அதன்முன் சேய் அவசரப்படுவது சரியல்ல. சொரூப தரிசனம் வேண்டும் என்று விண்ணப்பிப்பதே பிழையாகும். சரியல்ல இது என்பதை,

---

பேதபுத்தி போட்டியொடு, பொல்லாப்புப் பேசியே,
ஏதம் பலசெய் திறக்கின்ருர் பல்லோரே.

உலகம் உன்மூலம் உணரும். இனி நீ ஆறெழுத்தை உருவேற்றி யிரு! காலம் வரும்; இனிது அருள்வம் என்றான் எம்பிரான்.

மகதி மாதவர்

வீரவாகுவிற்காக எழுந்த விஸ்வ ரூபத்தைச் சேவித்து, விண்ணவர் முனிவர் விழுந்து வணங்கினர். அவர்களுள் ஒருவர் நாரதர். அவ்வமயம், அவர் அடைந்த இன்பததிற்கு அளவில்லை. விரைந்தார். நேரே வைகுந்தம் சென்றார்.

மாதவா! யாதவா! கேசவா! மாயா! ஆயா! மதுசூதா! செந்திலாண்டவன் விசுவ உருவைச் சேவித்தேன். என்னுள் எழுந்த விம்மிதம், இன்னும் அடங்கவில்லையே!

பாரதப் போரில், நீர் அர்ச்சுனற்காக விஸ்வரூபம் எடுத்தீர்! சிறந்த அதை அடியேன் சேவித்தேன்;

தண்டக ஆரண்யத்தில், அந்தப் பார்த்தனுக்கு, சிவ பிரான், கம்பீரத் தன் விஸ்வ உருவைக் காட்டினன்; அதை அண்மையில் இருந்தே கண்டேன் அடியேன்.

இயல்பான நரநாரணர் தவத்திற்கு இரங்கி, பதரிகா சிரமததில, காலாக்கினி ருத்திரர், தன் உலக வடிவைக் காட்டினர். கண்டேன் அடியேன். கை குவித்தேன்.

சிவபிரான, இராமனுககுத் தண்டகாரணியத்தில் காட்டிய விசுவ ருபத்தையும் கண்டேன்.

படைப்புத் தொழிலைப் பங்கயனுக்குக் கற்பிக்க, பரமேஸ் வரர், மேருமலையில் காட்டிய அந்த அரிய பெரிய திருவுருவை யும் அடியேன் சேவித்துளன்.

மதுசூதனு! திருச்செந்தில் ஆறுமுகப் பரமன் இன்று காட்டிய விசுவ ரூபம்போல, என்றும் கண்டிலன்; எங்கும் அறிந்திலன். அதனுல் விளைந்த புளகிதம், இன்னும் எளி யனை நீங்கியது இல்லையே! காரணம் யாது? அடியேற்கு

நல்லதும் தீயதும நாடி அறியாமல்,
அல்லதே செய்து அழிகினரும் பல்லோரே.

அறிவித்தருளும் என்று, வீழ்ந்து பணிந்து விண்ணப்பித்தார் நாரதர்.

அபேத ரூபம்

புன்னகை செய்தார் புருடோத்தமர். தத்துவக் கடலைத் தாண்டிய முத்தருள், நலம் சிறந்த தலைமை நாரதா! கவன மாக் கேள்!

ஐந்து முகத்தர் சிவபிரான். அவர்க்கு அதோ முகமும் உண்டு. அது கீழ்நோக்கும் அதிரகஸ்யத் திருமுகம். அதை யோகிகளே அறிவர். ஐம்முகத்துள் ஒன்று மேல் நோக்கும். அந்த இருமுகங்கட்கும் உரிய தோள்கள நான்கும், ஊனக் கண்களா உணருமாறு இல்லை.

அருளாட்சி நடத்த, அதோமுகம் தனியாகும். அந்த இரு முகங்கட்கும் உரிய நாற்கரங்கள், தனித்த அவ்வுருவில் தரிசனம் ஆகும். வேறாகி, அங்ஙனம் வெளிப்படும் திருவுருவம் எம் உருவம். இனி, வித்தக அவ்வுருவங்களின் செயல்களை விவரிக்கிறேன். கேள்!

மலைமேல் இருக்கிறார் சிவபிரான். அரிய கடல் மேல், யாம் அமர்ந்துளம்.

அறிவுக் கண்ணர் அந்த அமலர். யாம் அறிதுயில் கண்ணன் ஆகின்றேம்.

அவர் பசுபதீசர்; பசு பரிபாலனன் எனும் பொருளில், கோபாலன் எனும் பெயரைக் கொண்டுளம் யாம்.

அவர் பாம்பாபரணர்; பாம்பின் மேல் யாம் படுத்துளம்.

அவர் பவள வண்ணர்; யாம் பசுமை வண்ணம்.

அவர் இடத்தில் மலைமகள்; எம் மார்பில திருமகள்.

அவர் திருமுகம் ஐந்தும், நால் திசைகளையும் ஆகாயத்தையும் நோக்கும் காக்கும்.

மனத்தூய்மை, வாய்மை வளர வைக்கும் வாழ்வில்;
இனத்தூய்மை காத்தார்க்கு, என்றுமின்பம் என்றறியே.

எம் ஒரு திருமுகம், கீழ் நோக்கும், காக்கும். அவர் சடை முடியர்; யாம் கோல மாமுடி கொண்டுளம்;

கனிவொடு உயிர்களைக் காப்பது எம் தொழில்; இளைப் பாற்றுவது சிவச்செயல்.

அவர் திருநாமம், நமசிவய எனும் ஐந்தெழுத்து ஆக அமைந்துளது. எம் திருநாமம், ஓம் நமோ நாராயணாய எனும் எட்டு எழுத்து ஆகும்.

ஒன்றாயிருந்த போது, அத்திருமேனி ரகஸ்யத்தை ஒருவரும் உணர்ந்திலர். வேறுபட்டபின் சிவன் என்றும், திருமால் என் றும், எங்கும் எவரும் எண்ணுகின்றனர்; ஏத்துகின்றனர். அருளார் பயனை அடைகின்றனர்.

ஒன்றுபட்டபோதும், வேறுபட்ட போதும், ஈர் உருவும் ஓர் உருவே என்பதை, அனுபூதிக் காலத்தன்றி, மற்ற காலங் களில் மேதைகளும் மறந்து விடுகின்றனர்.

அந்த ரகஸ்யத்தை, எவரும் இனிது அறிந்து கொள்ள, இந்த இரு திருவுருவங்களும் ஒன்றாக இணைந்தன. அதுவும் ஒரு அருளாடல்; அனுபவ உண்மையான அத்திருவுருவம், குகன் எனும் திருப்பெயரைக் கொணடுளது.

சிவத்தின் ஐம்முகமும், எம் திருமுகமும் சேர்நது, குகன் உருவில், ஆறுமுகம் எனும் பெயர் அமைந்து, வெளிப்படுமாறு எவர் முன்னும் விளங்குகினறது.

"ஐந்துமுகம் காட்டாமல், ஆறுமுகம் காட்டவந்த செஞ் சரணச் சேவடியைச் சேரும்நாள் எந்நாளோ?" என்று, இனி எவரும் போற்றுவது இயற்கை அல்லவா.

சிவத்தின் எட்டுத் திருத தோள்களும், எமது நாற்றோளும் இணைந்து, பன்னிரு தோளன அபபரன் என ஆயின.

எம் கண்களும், சிவனார் திருக்கண்களும் ஒருஙகு இயைந் தமையின், "பன்னிரு கண்ணுடைய பிள்ளை தோன்றும்" என்று,

---

திரையில் விளஙகித திகழ்கிறது தீபம்;
நிறைஞானம் உள்ளத்தில் நீடாட்சி செய்கிறதே.

தாண்டகம் பாடும் காலமும் வரும். நெற்றிக் கண்களையும் இணைத்து, பதினெட்டுக் கண்ணினன் குகபரன் என்னும் அனுபவமும் அதனின் இருக்கும்.

இரு உருவமும் இணைந்தபோது, அவ்வவ் வுருவங்களில் இருந்த படைகளும் சத்திகளும், ஒருமை பெறுவது இயற்கை.

முச்சத்தி ரூப சிவனார் முத்தலைச் சூலமும், துஷ்ட நிக்ரக எமது சக்கரமும் இணைந்து, குகன திருக்கரத்தில், வேல் என்னும் பெயர் கொண்டு விளங்குகின்றது. முழுசத்தி ரூபம் ஆதலின், சத்தி, ஞானசக்தி என்னும் பெயர்களையும் அது எய்தும்.

சிவத்தின் வலத்தில் சிவகலை. அது விண்ணில் சூரியன் என விளங்கும்; அசசத்தி, எம் வலக்கண்ணில் இடம் பெறும். பக்தர் களின் பந்தம் அகறறும் அதன் பெயர், விட்சேபசக்தி. (விட் சேபம் - விலக்குதல்.) அச்சத்தி, வள்ளியம்மை என்று வரும்.

சிவத்தின் இடத்தில் சத்திகலை. அது, சாந்த வானில் சந்திரனாகி, எம் இடக்கண்ணில் இடம் பெறும். அதன பெயர் ஆவரண சக்தி. அச்சததியே தேவயானை. இந்த இருசகதிகளும், குமரனது இரு புறததும் அமர்ந்து இருப்பர். வித்தகப் பிரமம், எவரும் அறியும் நாம ரூபம் கொண்டு, இப்படி யெல்லாம் விளையாடுகின்றது; இது அனுபவ ஞானிகள் அறிந்துள செய்தி.

திருமந்திர ஆட்சி

அறுமுகனது திருபபெயர்கள் பல. அவைகள், மநதிர ரகஸ்யமாக மலர்நதிருக்கின்றன. அவைகளுள் ஒனறு, சுப்பிரமண்யம்.

அம்மந்திரம், மூன்று பதங்களை யுடையது.

ப்ரஹ்ம - (பெரிய பொருளான) சிவம்;

ந்ய - வியாபகத் திருமால். சு எனும் ஓரெழுத்து ஒரு மொழி, (பினவரும் இருபதங்களையும்) இணைவு (செய்து,) காணுங்கள் இந்த அதிசயததை எனறு எவர்க்கும் காட்டு.

உலகமிது மாயை; பந்தமென ஓடாமல்,
நிலவும் உறுதிகொண்டு நிற்பதுதான் வீரமரோ.

கின்றது. இந் நாம மந்திரம், சிவ விஷ்ணு அபேதத்தைச் சிறக்கத் தெரிவிக்கிறது அல்லவா! நலம் சிறந்த இப் பொருள், நான்குமறைத் தீர்ப்பு.

மற்றொன்று, சரவணபவ எனும் மாபெரும் தெய்வ மந்திரம். இது, மூன்று பதங்களை யுடையது. இதனில் பல பொருள்கள் இருக்கின்றன. அவைகளுள், இங்குக் கருதத் தக்க பொருளைமட்டும் காட்டுகின்றேன். கேள்!

சரம்-நீர்; வந - இருப்பிடம். நாரம் - நீர்; அயந - வாழும் இடம்.

எனவே சரவணன் என்பது, நாராயணன் எனும் பொருளையும், நாராயணன் என்பது, சரவணன் எனும் பொருளையும் அறிவிக்கிறது அல்லவா!

பவ எனும் பதம், சிவன் எனும் பொருளது. சரவண பவன் என்பது, நாராயண சிவம் என்று ஆதலை அறிந்துகொள்!

குஹ எனபதில், கு - திருமால்; ஹ - ஹரன்! இது புனித முதற் குறிப்பால் போந்த பொருள். இந்த அதிரகஸ்ய சேர்க்கையை அறிந்தவர்கள், ஆஸ்திக நுட்பத்தை அறிந்தவர்கள்.

நிலம் - எம்சொருபம்; மலை சிவஸ்வரூபம். நிலம் மலை இரண்டிலும், குமரன் கோயில் கொண்டுளன். ஊன்றி இவ் வற்புதத்தை உணர்ந்தவர்கள, அருள் நூல் நுட்பம் தெரிந்தவர்கள்.

திருவேங்கடமலை, பாவம் தீர்க்கும் பரமதலம். (*வேம் - பாவம்; கடம் - எரித்தல்.*)

மற்று, அழிவிலாச் செல்வத்தை அருள்வது எனும் பொருளும் அதனில் இருக்கிறது. (*வேம் - அழிவின்மை; கடம் - ஐஸ்வர்யம்.*)

உளருதே; உள்ளது செய்; உள்ளத்தால், உன்னைப்பார்; தளராதே; என்று தனிக்கீதை சொல்கிறதே

இது, பேறுதரும் தெய்வத் திருப்பதி. அம்மலேயும், அதன் மேல் உள்ள புனித குகனேரிப் பொய்கையும், மூர்த்தத்தில் மூர்த்திகரித்த மூர்த்தியும், முருக முருந்த சொரூபங்கள் என்று உணர்ந்து கொள! இரு முதலும் ஒரு முதல்போல் இருக்கும் இருப்பால், அத் திருப்பதி என்றும் சிறப்பெய்தி யிருக்கும். அங்குள முருகனே, வேங்கடசுப்பு என்றும், வேங்கட சுப்ர மண்யம் என்றும், எம்மை வேங்கடாசலபதி என்றும் அறிந்து அன்பர்கள் ஆராதிக்கின்றனர்.

அநுபூதிமான்கள், இந்த அனுபவங்கண்டு அதிசயிக்கின் றனர். அம் மூர்த்தம், விஷ்ணுவாக, சிவமாக விளங்குதல் கண்டு, பாட்டாகச் சிலர் அதைப் பாடுவர்.

சித்தின் பூரிப்பே சிவ சுப்ரமண்யம்; அச் சித்து, நாரா யணி என்றும் நவிலப் பெறும். இக்காரணத்தால் அச்சந்நிதி, தேவி நிலயம் என்றும் தெரிதலுறும். அதற்கு ஏற்றபடி, கோயில் மதில்களின் மேல், சிங்கங்கள் இருத்தலேச் சிந்தனே செய்! இங்கு சுவாமிக்குச் சாத்தும் பரிவட்டம், அம்பிகைக்குச் சாத்தும் அளவினே யுடையது. இத்தலத்தில், நலமுற வில்வார்ச் சனேயே நடைபெறும்.

நட்சத்திரங்கள் இருபத்தேழு. அவைகளுள் ஒன்று கார்த்திகை. அதில் முன்மூன்று பகுதி, பினமூனறு பகுதி. முற்பகுதியில் என அம்சமான கலேமகளும், நிலமகளும், உமா தேவியும் இருத்தலே யறிந்துகொள்.

பிற்பகுதியில், உருத்திரர் மகேசர் சதாசிவர் உளர். இங்ஙனம் ஆறு பகுதிகள் ஆகிய கார்த்திகை, சிவவிஷ்ணு சொரூபமாகச் சிறந்து இருக்கின்றது. கார்த்திகேயனேக் கிருத் திகையில் வழிபட்டால், இனிய சிவத்திற்கும் எமக்கும் இன்பம் பெருகும்.

இயற்கை யந்திரமான ஆக்கையுளே, எம்மான்
இயற்கை ஒளிமயமா யென்றுமிருக் கின்றனே.

சிறந்த பிரணவம் குறித்துச சிறிது கேள். அப்பிரணவம், மூன்று பகுதிகளாகி, பிரிநிலைப் பிரணவம் எனப்பெறும். (1) அகரத்தில பிரமன்! (2) உகரத்தில் யாம்: (3) மகரத்தில் உருத்திரர் என்பது பொது மரபு.

யாம் இருக்கும் உகரத்தில் குமரன்: வலப்பால் அகரத்தில் வள்ளியம்மை; இடப்பால் மகரத்தில் தெய்வயானை; இது சிறப்பு மரபு.

இம்மூன்றும் ஒன்று சேரில், ஓம் எனும் சேர்நிலைப் பிரணவம் எனப் பெறும். அது, இருதேவியருடன சரவணபவன் இருக்கும் ஒளிவட்டம். புரிகிறதா நாரதா! என்று புகன்றார் திருமால்.

குமரன் விஸ்வரூபம் கொண்டால், சிவ ஆட்சி, தேவி ஆட்சி, திருமால் எனும் எமது ஆட்சி யாவும் அதனில் அமைந்திருக்கும். அதைத் தரிசிபபாக்கு உதிக்கும் தனியின்பம்; கண்ட உனக்கு விம்மிதம் விளையும் காரணம் இது. தெரிகிறதா! என்று, அருளொடு திருமால அறிவித்தார்.

(இதுவரை, திருச்செந்தூர்ப் புராண சாரம்.)

முனைப்பு அடஙகினல், உள்ளம் ஒருமை யுறும். அப்போது உதிக்கும் ஆநந்தம். அந்த ஆநந்தத்தில் லயமடையும் ஆனமா. நினைபபும் மறப்பும் அநநிலையில நீஙகிவிடும். அவ்வமயம், ஓஙகார நாதம் உதிக்கும்; அவ்வுதயத்தில் உதிக்கும் பேரொளி. ஒளி நடுவில் முருகோதயம். அநத முருக தரிசனம் ஆம் பொழுது, மேற் சொன்னவை யாவும் உண்மையே உண்மை யென்று உணரவரும்.

"ஆங்காரமும் அடஙகார்; ஒடுங்கார்: பரமாநந் தத்தே
தேஙகார்; நினைபபும் மறப்பும் அறார்; தினைப்போதளவும்
ஓங்காரத்துள ஒளிக்கு உளளே முருகன உருவம் கண்டு
தூங்கார்; தொழும்பு செய்யார்; என செய்வார் யமதூதருக்கே"

என்ற அருணை முனிவரின் அலங்காரம், சாதகர்க்குக் காட்டுகின்ற ஒரு சமிக்ஞை. இந்த சாதனை எள்ளளவும் இன்றி, ஆஸ்திகப பெயரால பேதம் பேசிப் பிணங்குகின்ற வாத நோயாளர்களை, கடவுள் பெருமானதான காப்பாற்ற வேண்டும்.

ஓம்

திருச்செந்தூர்ப் புராண

ஆசிரியர் வரலாறு

திருச்செந்தூர்ப் புராணத்தைச் செய்தவர், வென்றிமாலைக் கவிராஜர்; இவர் திரிசுதந்தர அந்தணர். ஏறக்குறைய 250 ஆண்டுகட்கு முன்பு இருந்தவர். செந்தில் ஆண்டவன் திருக் கோயில் மடைப்பள்ளித் திருப்பணி செய்தவர். கண்ணீரைக் காணிக்கை யாக்கி, நாடோறும் கந்தப் பரனை வந்தித்தவர். இவரை ஆளாக்கிக் கொண்டான் ஆறுமுகப் பெருமான்.

அத்தன் பிரசன்னமாகி அறிவித்தபடி, செவ்வலூர் ஸ்ரீமஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் இடத்தில் வடமொழியில் இருந்த திருச்செந்தூர் மகாத்மியத்தை, அவர் மொழி பெயர்த்து உரைக்க, அவ்வப்போதே அவைகளை, அமுதினும் இனிக்கும் அருந் தமிழால் பாடினர்.

சொல் நயத்தினும், ஓசை யினிமையினும், பொருள் சுவையினும், இது போலும் தலபுராணம் ஒன்றைத் தமிழகத் தில் அறிந்திலம்.

எம்மதமும் சம்மதம் என்று ஏற்கும் செய்திகள், இந்நூ லில் ஏராளமாக இருக்கின்றன. பிரமதேவர், சுகர் முதலி னோர் பரமனைப் பாடும் துதிகளை, ஓதுநர் உள்ளம் கல்லாய் இருந்தாலும் கரைந்து விடும்.

அபேத தெய்வ அனுபவத்தை, வென்றிமாலைக் கவிராஜர் விளக்கும் அளவு, வேறு எவரும் செய்ய முயன்றிலர். சமய சச்சரவில் சிக்கிய மனத்தினர், இந்நூலை ஒருதரமேனும் ஓதுதல் நலம்.

அற்புதமான செய்திகள், புராணத்தில் ஏராளமாக இருக் கின்றன. இலக்கியச் சுவை, இலக்கண நலன், மந்திர ரகஸ்யம், சாதனை வழிமுறை, இன்னும் யாது யாது அறிய வேண்டுமோ அத்துணையும் இந்நூலில் இடம் பெற்றுள. இத்தகைய அரியதொரு காப்பியத்தை அருளிய கவிராஜர் வரலாறு மிக அற்புதமானது.

திருச்செந்தூர்ப் புராணவுரை, கவிராஜர் வரலாற்றுடன், திருச் செந்தூர் தேவஸ்தானம் வெளியிடுகின்றது என்பது, குறிப் பிடத் தக்க செய்தி.

வென்றிமாலைக் கவிராஜர் வியனடிகட்கே அடைக்கலம்!

'VIJAYADASAMI'.

All victory unto Thee! Oh! Mother of the Cosmos!. The seething darkness of nine nights has disappeared, with the blazing dawn of Vijayadasami. No more shall man stagger in darkness. Realisation is at hand for humanity to profit.

Lo! The vision of the effulgent Sri Parvathi catches the eye. She is the mother universal for all Jivas of all the worlds above and below. Sri' Mahaeswar, the heavenly father is on her right. All around are the singing devotees of Lord Siva. They are of our kith and kin. "Bandva Siva Bhaktascha". This sacred vision will establish every Jiva in the sovereignty of his own Kingdom—the swarajya within and swarajya without. Henceforth all Jivas are the citizens of the universe, the one indivisible divine State of God and Man. Sri Annapoorneswari is also the minister for food. The world's requirements will be met from the inexhaustible supplies that shall flow from out of her grace. Heartfelt prayer of man is the way to tap the mercy of the Mother: Self knowledge, self-respect and self-control, as the great poet said, these three alone lead life to sovereign

power. The complete sovereignty within is the Sine Qua non of effective and happy sovereignty without. Both are but the kindly gifts of Vijaya-Parameswari, Sri. Lalitai or Sri Vidya, as her devotees proclaim her. May the Mother ever bless us.

But even so why ten days of worship in Navarathri? The first nine days of Navarathri celebrations represent the continuous fight of the forces of light with the forces of darkness. The grace of Ambal envisages all victory all through for bakthas. There are nine divisions of darkness for the baktha to fight against. Everyday's fight is a victory for the Baktha. The nine shades of darkness or evil forces are destroyed day by day over the nine days. The nine days of Jayam or success takes us to the tenth day of Vijayam, Visesha Jayam when the effulgence of light and gnana are permanently established for the benefit of humanity, and the entire cosmos becomes the Poorna Sovereignty of Sri Vidya—Mother's Grace which means the blessedness of mankind.

Thiruppugal Mani.

607

வைதிடினும், வாழ்த்திடினும், இன்ப துன்பம்
வந்திடினும், வம்பு கோடி
செய்திடினும், தண்டலைநீள் நெறியார்தம்
செயலென்றே தெளிவது அல்லால்,
மெய்தவிர அவர் செய்தார், இவர் செய்தார்
எனநாடி வெறுக்கல் ஆமோ ?
எய்தவர்தம் அருகிருக்க, அம்பைநொந்த
கருமம் என்ன இயம்புவீரே !

—படிக்காசுப்புலவர்.

No 1506
ASOKA
ந.1506

Regd. No M.5890 Amirthavachani ஜூலை , 1962 அமிர்தவசனி

Coffee

Ours for Quality

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி : : மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினுயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

1/6, செகின் லேன் பீச்,

சென்னை-1. டெலிபோன்: 22058

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 8, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.

Edited & Published by B. Muthuswamy 8 Bunder Street, Madras-1.